Registered as a News Paper in Sri Lanka

சமூக அரசியல் மாத இதழ்



# கண்ணோட்டம்

KANNODDAM

කණ්ණෝඩ්ඩම්



வெளியீடு :- 82 | மே 2017 | விலை ரூபா :- 10.00

# போதையூட்டும் வெத்து வேட்டு அரசியலால் தமிழர்களுக்கு விமோசனம் உண்டா?

மனிதர்கள் நிம்மதியாக சமாதானமாக மகிழ்ச்சியாக வாழ்வதற்கான உறுதியான சூழலை கட்டியெழுப்புவதே சமூகத் தலைமையின் கடமை.

போதையூட்டும் வெத்து வேட்டு அரசியலால் தமிழர்களுக்கு விமோசனம் உண்டா?

மக்கள் நலன்சார்ந்த அரசியல் மருந்துக்கும் கிடையாது என்ற நிலை தமிழர் அரசியல் சூழலில் வெளிப்படையாகவே தெரிகிறது.


மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசியல் தலைமைத்துவம் மக்கள் பிரதிநிதிகள் என்போர் கையாலாகாதவர்களாக போனதன் விளைவு மக்கள் தமது பிரச்சனைகளை சுயாதீனமாகத் தமது கையில் எடுத்துள்ளனர்.

படையினரால் ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்களை விடுவிக்கக் கோரி மக்கள் வாரங்கள், மாதங்கள் கடந்து போராடுகிறார்கள் .

காணாமல் போனவர்கள் கைது செய்யப்பட்டவர்கள் தொடர்பான தெளிவான பதில் பொறுப்பு கூறல் நிகழாததால் மக்கள் சீற்றம் அடைந்து வீதிக்கு வருகின்றனர்.

பயங்கரவாத தடைச்சட்டத்திற்கு பதிலாக புதிய சர்ச்சைக்குரிய கெடுபிடியான கடினமான சட்டங்களை கொணடுவர அரச மட்டத்தில் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகிறது.

( தொடர்ச்சி 11 ஆம் பக்கம் )




## திருகோணமலையில்

## தமிழர் சமூக ஜனநாயகக் கட்சியின் மேதினம்




தமிழர் சமூக ஜனநாயகக் கட்சியின் மேதினக் கூட்டம் திருகோணமலையில் நடைபெற்றது. திருகோணமலை, திருஞானசம்பந்தர் வீதி, கற்பகப்பிள்ளையார் கோவில் முன்றலில் தோழர் சத்தியன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தமிழர் சமூக ஜனநாயகக் கட்சியின் தலைவர் தி. சிறிதரன் தோழர் சுகு) கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். தொழிற்சங்க பிரதிநிதி தோழர் சந்துரு, தனியார் கல்வி நிறுவன ஆசிரியர் அகிலன், தோழர் மோகன் ஆகியோரும் தொழிலாளர் தின வரலாறு, தொழிலாளர்களின் நிலை, தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள். தொழிலாளர் வர்க்க ஒற்றுமை, எனபன குறித்து தமது கருத்துக்களை தெரிவித்தனர்.

# மக்கள் சார் சீர்திருத்தங்கள் துரிதப்படுத்தப்பட வேண்டும்

### தமிழர் சமூக ஜனநாயக கட்சியின் 2017 மேதின பிரகடனம்

உலகத்தொழிலாள வர்க்கம் மிகப் பெரும் சவால்களை எதிர் நோக்கி நிற்கும் தருணத்தில் நாம் மேதின நிகழ்வை நினைவு கூருகிறோம்.

உலகத்தை அச்சுறுத்தும் யுத்த அபாயம் சூழ்ந்துள்ள நிலையில் அடிப்படைவாத - தேசியவாத அலை உத்வேகம் பெற்றுள்ள நிலை மாத்திரம் அல்ல.

வட அமெரிக்கா, ஐரோப்பாவிலும் உலகளாவிய அகதிகள் நெருக்கடி, யுத்தம், பயங்கரவாதம் பேரழிவு உலகின் மனித குலத்தின் ஒருபகுதியினர் மீது திணிக்கப்பட்டுக்கொண்டிருக்கும் சூழ்நிலையில் தான் இந்த மேதினம்.

ஏற்றத்தாழ்வு முன்னெப்போதும் இல்லாத அளவில் அதிகரித்துள்ளது .

உலகின் கால்பங்கினரின் தேவையைப் பூர்த்தி செய்யும் பொருளாதாரம் விரல் விட்டு எண்ணக் கூடிய ஒரு சிலரின் கைகளில். உலகளாவிய சமூக நீதி இந்த அவக் கேட்டுடன் தான் இருக்கிறது.

வறுமை, போசாக்கின்மை, சுற்றாடல் பேரழிவு, காலநிலை மாற்றம், வரட்சி குடி நீர் பிரச்சனை என்பன விஸ்வரூபம் எடுத்துள்ளன.

இலங்கையின் சுகாதாரம் கல்வி சேவைத்துறைகள் நலிவடைந்துள்ளன.

பெருவாரியான மக்களுக்கான வாழ்வுக்குத் தகுந்த சூழல் மகிழ்ச்சியாக, சமா



தானமாக, கண்ணியமாக வாழ்வதற்கான சூழல் உருவாக்கப்பட வேண்டும்.

படையினர் வசமுள்ள மக்களின் காணிகளை விடுவிப்பதற்கான போராட்டங்கள் மாதக்கணக்கில் தொடர்கின்றன.

தவிர யுத்தம் முடிந்து 8 ஆண்டுகள் ஆகியும் மக்களின் காணிகளை விடுவிப்பதில் இழுபறி தொடர்கிறது.

பொதுவாகவே நிலமற்றவர்கள் வடக்கு கிழக்கில் பரவலாக காணப்படுகிறார்கள்.

இதில் தமிழ், முஸ்லீம் மக்கள் பெருமளவு பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் நில உரிமை இன்றுவரை உறுதிப்படுத்தப்படவில்லை.

☆ பெருவாரியான மக்களுக்கு இருப்பதற்கு நிலமும் வீடும் வேண்டும்.

( தொடர்ச்சி 3 ம் பக்கம் )

## தமிழர் சமூக ஜனநாயகக் கட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணோட்டம்
KANNODDAM



sdptoffice@gmail.com
294 A. கண்டிவீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 2222022

## கண்ணியமான வாழ்வொன்றை நிறுவ ...

தொழில்- காணி- கல்வி -சுகாதாரம் -வைத்திய சேவை- பாரம்பரிய தொழில்களின் விருத்தி- சுற்றாடல்- பாதுகாப்பு- மனித உரிமைகள்- அடிப்படை உரிமைகள்- வாழ்வின் அனைத்து அம்சங்களிலும் ஜனநாயகம் என்பதே ஒரு நாடு சிறப்படைவதற்கான வழியாகும்.

இலங்கையைப் பொறுத்தவரை சமூகங்களுக்கு உள்ளும் சமூகங்களுக்கு இடையிலும் ஜனநாயக உறவு, சமத்துவம் என்பன மேலதிக குறிப்பிடத் தகுந்த முக்கியத்துவம் பெறுகின்றன.

சுதந்திரம் பெற்று 69 ஆண்டுகளில் 30க்கு மேற்பட்ட ஆண்டுகள் யுத்தமும் பேரழிவும் என்று கழிந்தது. ஆனால், அதிலிருந்து பாடம் படித்தோமா? கற்றோமா?

சமூக பொருளாதாரவாழ்வை மேம்படுத்துதல்

இன சமூகங்களின் சமத்துவம், சமூக நீதி மறுக்கப்பட்டோரின் இயக்கங்கள், தொழிற்சங்கங்கள், பால் சமத்துவத்திற்கான - ஜனநாயக மனித உரிமைகளை நிலை நாட்டுவதற்கான இயக்கங்கள்

சமத்துவமான வளப்பகிர்விற்கான சமூக பாதுகாப்பிற்கான இயக்கங்கள்.

சுற்றாடல் பாதுகாப்பிற்கான விழிப்புணர்வு இயக்கங்கள்

சமாதானத்திற்கான சமூக உறவுகளை வலுப்படுத்துவதற்கான இயக்கங்கள்

பல்லாயிரக்கணக்கான ஊடக அறிக்கைகள், எழுத்துக்கள், அச்சு இலத்திரனியல் ஊடக நடவடிக்கைகள், சமூக வலைத்தளங்கள் என முன்னெடுக்கப்பட்டாலும் செயல்முறையில் முன்னேற்றத்திற்கான பாதையில் ஒரு மந்தமான இழுபறி நிலையிலேயே இந்த நாடு இருந்து கொண்டிருக்கிறது.

சலுகை பெற்ற அதிகார வர்க்கம் -அரசியல்வாதிகள் -தொழில் துறை வர்த்தக மாபியாக்கள் இலங்கையில் தூக்கலாக பிரகாசமாக வாழுகிறார்கள்.

சாதாரண மக்களின் வாழ்வு மகிழ்ச்சி அற்றதாகவும் "பாழ்பட்டு வறுமை மிஞ்சி" யதாகவும் காணப்படுகிறது.

வாழ்வு கெடுபிடியானது.

விண்ணப்பப் படிவங்கள் அதிகாரத்தின் அலட்சியம்

வாழ்வின் அடிப்படை ஆதாரங்கள் பற்றாக்குறை என்பன மனிதர்களை மகிழ்ச்சி அற்றவர்கள் ஆக்கி இருக்கின்றன.

சமூகங்களிடையே வெறுப்பு குரோதம் பகை தொடர்ச்சியாக பராமரிக்கப்படுகிறது.

இராணுவ கண்ணோட்டத்துடனான பாதுகாப்பு வாதம்

இன்றளவும் இனத்தையும் மதத்தையும் பாதுகாப்பதற்கான போலியான நாடகபாணி உணர்ச்சி ஊட்டல்கள் இலங்கையின் சமூகங்களை ஓயாமல் சிதறடித்துக் கொண்டிருக்கிறது.

சமூகங்களின் சமத்துவமான வளர்ச்சி என்பது தொலை தூர கனவாக மாறிக் கொண்டிருக்கிறது.

இந்த வெகுஜன விரோத சக்திகளின் ஆதிக்கம் நீர்த்துப்போக செய்யப்பட்டு மானிட மாண்புகளை முன்நிறுத்தும் பண்பாடு சகல மட்டங்களிலும் முன்னெடுக்கப்பட வேண்டும்.

அப்போதுதான் நம்பிக்கை வெளிச்சம் சமூகத்தில் பிரகாசிப்பதும் முன்னோக்கிய பாதயில் நடைபோடுதலும் நிகழும்.

இதனை நிகழ்த்துவதற்கு சகல குறுகிய எண்ணங்களுக்கு எதிரான மானிடம் என்ற பரந்த சிந்தனையின் அடிப்படையில் செயற்பட வேண்டும்.

போதும் போதும் என்ற அளவிற்கு நாடு அராஜகமாகி விட்டது.

இந்த அராஜக நிலை மக்கள் விரோத சக்திகளை மீண்டும் மீண்டும் தூக்கி நிறுத்தும்

எனவே மக்கள் நலன் சார்ந்த பிரக்ஞை உள்ள சக்திகள் ஒருங்கிணைந்து செயற்பட முனைவோம்.

இந்த நாட்டு மக்களுக்கு கண்ணியமான வாழ்வொன்று ஸ்தாபிக்கப்பட வேண்டும்.

# தமிழர் சமூக ஜனநாயகக் கட்சி

**Social Democratic Party of Tamils (S.D.P.T)**

## அரசியற் திட்டம்

2016 ஏப்ரல் 2 ஆம் திகதி நடைபெற்ற
கட்சிக் காங்கிரஸினால் அங்கீகரிக்கப்பட்டது.

( தொடராக பிரசுரிக்கப்பட்டு வரும் கட்சி அரசியற் திட்டத்தின் 6 ஆம் பாகம் )

### 12. வெளிநாடுகளில் வாழும் மற்றும் தொழில் புரியும் மக்கள் குறித்து :-

- தொழில் நிமித்தம் வெளிநாடுகளுக்கு, குறிப்பாக, மத்திய கிழக்கு நாடுகளுக்கு சென்றிருப்போர் அனுப்பும் பணத்தினால் பெரும் நன்மை பெறும் இலங்கையானது, அவர்களின் பாதுகாப்பு மற்றும் தொழில் உரிமைகள் தொடர்பாக அந்தந்த நாடுகளோடு போதிய ஏற்பாடுகளைச் செய்வதில் இன்னமும் பின்தங்கியதாகவே உள்ளது. குறிப்பாக, மத்திய கிழக்கில் வேலை செய்யும் பெண்களின் நிலைமைகள் தொடர்பாக அதிகமான கரிசனை தேவைப்படுகிறது. வீட்டு வேலைக்காக அங்கு அனுப்பப்படும் பெண்கள் பல்வேறு இன்னல்களையும், துன்பங்களையும், துன்புறுத்தல்களையும் அனுபவிப்பது தொடர் கதையாக உள்ளது. அரசாங்கத்துக்கு இவர்களைப் பற்றிய அக்கறையும் பொறுப்புணர்வும் அவசியம். வெளி நாடுகளில் வாழும் இவ்வாறான தனது பிரஜைகளுக்கு அவ்வப்போது கடூரமான பாதகங்கள் ஏற்பட்டு ஒரு தேசிய நெருக்கடியாக அந்த விடயம் ஆகிறபோதுதான் ஈடுபாடு காட்டுவது என்றில்லாமல், வெளிநாடுகளில் தொழில் புரியும் இலங்கையர்கள் எந்தச் சூழலிலும் பாதுகாப்பாகவும் அடிப்படை உரிமைகளோடும் வாழக்கூடிய நிலைமைகளை இலங்கை அரசு உத்தரவாதம் செய்வது அவசிமாகும்.
- இலங்கையின் உள்நாட்டு யுத்தம் மற்றும் பாதுகாப்பற்ற நிலைமைகளின் காரணமாக மேலைத்தேய நாடுகளுக்கு புலம் பெயர்ந்துள்ள தமிழர்களின் எண்ணிக்கை சுமார் பத்து லட்சம் என கணக்கிடப்படுகிறது இவர்கள் அனைவரும் இலங்கை நாட்டை பூர்வீகமாகக் கொண்டவர்கள் - இலங்கையின் சொந்தக்காரர்கள் என்ற புரிதல் இலங்கை அரசுக்கு இருத்தல் வேண்டும். இவர்களை அந்நியர்களாக - பகைவர்களாக பார்க்கின்ற நிலைமைகளை அரசு முடிவுக்குக் கொண்டு வருவது அவசியமாகும்.
- புலம்பெயர்ந்து சென்றவர்கள் தாங்கள் குடியேறியுள்ள நாட்டின் பிரஜைகளாக இருப்பினும், அவர்களுடனான நல்லுறவுகளையும் நம்பிக்கைகளையும் வளர்த்து அவர்களின் வள ஆற்றல்களையும் - அவர்களின் அறிவியல், தொழில் நுட்ப, பொருளாதார, பல்மொழி அறிவுகளையும் அனுபவங்களையும் பகிர்ந்து கொள்வதற்கான ஏற்பாடுகள் இன்னமும் சரியாக மேற்கொள்ளப்படவில்லை. இலங்கை மக்களின் நீண்டகால நலன்களுக்கு நன்மை பயக்கும் வகையாகவும் அந்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமாகும். இவற்றிற்காக, புலம்பெயர்ந்தோர் இரட்டைக் குடியுரிமை பெறுவதை இலகு படுத்துவதுவும், அவர்களின் சொத்துக்கள், முதலீடுகள், வருமானங்களுக்கான போதிய பாதுகாப்பு உத்தர வாதங்களை நம்பத்தகுந்த வகையில் உறுதி செய்வதுவும் அவசியமாகும்.
- ஐரோப்பா, வடஅமெரிக்கா மற்றும் அவுஸ்திரேலியாவில் வாழும் புகலிடத் தமிழர்களின் தொடர்ச்சியான அக்கறைகளும் பங்களிப்புகளும் இங்குள்ள எமது மக்களுக்கு ஒரு பெரும் ஆதார சக்தியாகவும் நம்பிக்கையூட்டுவதாகவும் இருந்து வந்திருக்கிறது. மாறிவரும் அரசியற் சூழ்நிலைகளையும் அரசியல் பொருளாதார யதார்த்தங்களையும் கவனத்தில் எடுத்து, இங்குள்ள தமிழர்களின் ஜனநாயக வலுவை அதிகரிக்கும் வகையாகவும், பொருளாதாரரீதியில் இங்கு வாழும் விளிம்புநிலை மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்குடனும் வெளிநாடுகளிலுள்ள தமிழர்கள் அந்நாடுகளில் தாம் பெற்றுள்ள அறிவியல், தொழில்நுட்ப மற்றும் பன்மொழி வளங்களை எமது மக்களின் வாழ்வு நிலை உயரும் வண்ணம் பிரயோகிப்பதற்கு முன்வர வேண்டும்.

### 13. புலிகளால் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக:-

யுத்த காலத்தில் இலங்கை அரச படைகளின் தாக்குதல்களால் கொல்லப்பட்டோர் இலட்சம் பேருக்கும் மேல். இலங்கை அரச படையினரால் காணாமல் ஆக்கப்பட்டோரின் எண்ணிக்கையும் பல்லாயிரம் பேருக்கு மேல் என கணிப்பிடப்படுகின்றது. இந்த யுத்தகால இடைவெளியில் புலிகளால் கொல்லப்பட்ட மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட தமிழர்களின் எண்ணிக்கையும் பல்லாயிரங்களுக்கும் மேல். நாட்டின் ஆட்சியாளர்களும், தமிழர் சமூகத்தைச் சேர்ந்த பெரும்பாலானோரும் இவ்வாறு புலிகளால் காணாமல் ஆக்கப்பட்ட தமிழர்களின் குடும்பங்கள் அனைத்தையும், புலிகளால் கடத்தப்பட்ட தமது குடும்ப உறுப்பினர்கள், புலிகளால் கொல்லப் பட்டு விட்டார்கள் என தம்மைத்தாமே சுதாகரித்துக் கொள்ள வேண்டிய கட்டாயத்துக்கு உள்ளாக்கி விட்டனர். இந்தத் துயரங்கள் எந்த வேளையிலும் இங்கு மனித உரிமை விவகாரமாகப் பார்க்கப்படவில்லை.

மேலும், இந்திய இலங்கை சமாதான ஒப்பந்தம் நடைமுறையில் நிறைவேறுவதற்கும் சமாதானம் மற்றும் ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்காகவும் 1987 - 1990 காலகட்டத்தில் இந்தியப் படைகள் மற்றும் வடக்கு-கிழக்கு மாகாண சபையோடு ஒத்துழைத்தவர்களில் பல ஆயிரக் கணக்கானவர்கள் இந்தியப் படைகள் இங்கு இருந்த வேளையிலும், அந்தப் படைகள் இலங்கையை விட்டு வெளியேறிய உடனேயும் புலிகளால் கைதுசெய்யப்பட்டும், கடத்திச் செல்லப்பட்டும் கொல்லப்பட்டனர். ஆனால், அவர்களின் குடும்பங்களுக்கு எந்த நஷ்டஈடும் யாராலும் வழங்கப்படவில்லை. அவ்வகையாக குடும்பத் தலைவர்களை இழந்த குடும்பங்கள் பல இன்னமும் பெரும் சமூக பொருளாதார நெருக்கடிகளுடனேயே வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இவ்விடயத்தில் இலங்கை அரசும் இந்திய அரசும், சர்வதேச சமூகமும் அக்கறை காட்டி புலிகளாற் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கும், தனிநபர்களுக்கும் சமநீதி வழங்க வேண்டும்.

(அடுத்த இதழில் தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் சார் சீர்திருத்தங்கள் ....

( 1 ம் பக்கத் தொடர்ச்சி )

## தமிழர் சமூக ஜனநாயக கட்சியின் 2017 மேதின பிரகடனம்



பல்லினங்களின் நாடு என்பதற்கு அச்சுறுத்தல்




சம்பள உயர்வுக்கு தோட்டத்தொழிலாளர்கள் போராட்டம்



காணிகளை விடுவிக்க கேப்பாபுலவு மக்கள் போராட்டம்



பெண்கள் மீதான வன்முறைக்கெதிராகப் போராட்டம்




அம்பாறையில் வேலை கேட்டு பட்டதாரிகள் போராட்டம்



மீதொட்டமுல்ல குப்பைமேடு சரிந்து உயிர்ச்சேதம்



பாதுகாப்பான போக்குவரத்திற்கு அச்சுறுத்தல்

☆ 40 ஆயிரத்திற்கு மேற்பட்ட பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கான சமூக பாதுகாப்பு ஏற்பாடுகள் வடக்கு கிழக்கில் உறுதிப்படுத்தப்பட வேண்டும். இவை இழுபட்டுச்செல்லாமல் உடனடியாக மேற்கொள்ளப்படவேண்டும்

☆ மண்சரிவு அபாயங்களை குறைத்தல் அபாய கரமான இடங்களில் மக்கள் வாழ்வதான நிலையை தவிர்த்து பாதுகாப்பான வாழ்க்கையை ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும்

☆ இலங்கை முழுவதும் குப்பைகளை அகற்றுவதற்கான நவீனமுறைகள் இங்கு நடைமுறைக்கு கொண்டு வரப்பட வேண்டும்.

☆ நோய் நொடியில்லாமல் வாழுவதற்கான நிலமைகள் மேம்படுத்தப்பட வேண்டும்.

☆ கழிவுகளை அகற்றுதல், அழித்தல். மீள் சுழற்சிக்கு உட்படுத்துதல் ஒழுங்கமைக்கப்பட வேண்டும்.

☆ நீர்முகாமைத்துவம் இன்னும் விரிவு படுத்தப்பட வேண்டும்.

☆ சுகாதாரம், குடிநீர்- நன்னீர் சார்ந்த விடயங்களில் விரிவான ஆய்வுகள் வேண்டும்.

☆ பாரிய வர்க்க ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பதற்கான சமூக பாதுகாப்பு ஏற்பாடுகள் வேண்டும் கல்வி, மருத்துவம் குறைந்த செலவில் கிடைக்க வேண்டும்.

☆ ஆண்பெண் சமத்துவத்திற்கான பலமான அடித்தளம் இடப்பட வேண்டும். வன்முறை சகல மட்டங்களிலும் முடிவுக்கு கொண்டு வரப்பட வேண்டும்.

☆ மனித உரிமை ஜனநாயகம் மேலும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

☆ பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்பட வேண்டும்.

☆ இனவாத, மதவாத சக்திகள் தோற்கடிக்கப்பட வேண்டும்.

☆ இலங்கை பல்லினங்களின் சமயங்களின் நாடு என்பது நிலை நாட்டப்பட வேண்டும்.

☆ உள்ளக சமூக நீதி சகல சமூகங்களிலும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

☆ அதிகார நிர்வாக யந்திரங்களின் செயற்பாடுகளுக்கு மனித உரிமை ஜனநாயகம் பற்றிய போதனைகள் பயிற்சி நெறிகள் நடத்தப்பட வேண்டும்.

☆ நாளும் பொழுதும் மரணம் காயம் என அவலச் செய்தியாக வீதி விபத்துக்கள். இவற்றைக் குறைப்பதற்கான விழிப்புணர்ச்சி நடவடிக்கைகள் வேண்டும்.

☆ எமது வீதிகளில் சைக்கிளில் செல்பவர்கள் பாதசாரிகள் பொதுப் போக்குவரத்தை பயன்படுத்துவோருக்கான பாதைகள் வீதிச் சுதந்திரம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

☆ அதிகாரம், நிர்வாகம் மக்களுடன் ஜனநாயக ரீதியான அணுகுமுறையைக் கடைப்பிடிக்க வேண்டும்.

☆ வாழ்க்கைச் செலவுச் சுட்டெண்ணுக்கு குறைவாக ஊதியம் பெறுவோருக்கான நியாயமான வாழ்க்கைக்கான ஊதியமும் சமூக பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

☆ நிர்வாக யந்திரம் கெடுபிடி இல்லாததாக, மக்களுக்கு நட்பானதாக மாற்றப்பட வேண்டும்.

☆ சுத்தமான குடி நீரை அனைத்து மக்களும் பெறுவதற்கான நிலைமைகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

☆ படித்து விட்டு வேலையற்று நிற்கும் -30 ஆண்டுகளுக்கு மேலாக நிலவும் - அவலம் முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும்.

☆ கல்வி முறையில் தீவிர சீர்திருத்தங்கள் கொண்டு வரப்பட வேண்டும். தொழில் நுட்பம்- உயிரியல் தொழில்நுட்பம் உட்பட சுற்றாடல் தேவை சார்ந்ததாக மாற்றப்பட வேண்டும்.

☆ அறவிழுமியங்கள், சமூக நீதி பற்றிய போதனைகள் பாடவிதானங்களில் சேர்க்கப்பட வேண்டும்.

☆ விவசாயிகள், மீனவர்களுக்கு சந்தை பாதுகாப்பானதாக, நீதியானதாக அமைய வேண்டும்.

☆ உற்பத்தி, தொழில், சூழல் நம்பிக்கை நிறைந்ததாக மாற்றப்பட வேண்டும்.

☆ நில கடல் வளங்களைப் பாதுகாத்து அடுத்த தலைமுறைக்கு வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

☆ தொழில் துறைகள் விருத்தி செய்யப்பட வேண்டும்.

☆ தகவல்-வைபி தொழில் நுட்பம் பரவலாக குறைந்த செலவில் சாதாரண மக்களுக்கு கிடைக்க வழி செய்ய வேண்டும்.

☆ தகவல் அறியும் உரிமை சட்டமாக்கப்பட்டுள்ளது. சுதந்திர பொலிஸ், பொதுச்சேவை, நீதிச் சேவை ஆணைக்குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அதன் பலாபலன்கள் சாதாரண மக்களைச் சென்றடைய வழி செய்யப்பட வேண்டும். அவை மீண்டும் இன்னொரு விதமான அதிகாரக் கட்மைப்பாக மாறிவிடக் கூடாது.

☆ அடாவடித்தனம் ஊழல் அரசியல் சமூக அரங்கில் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் விரிவாக உறுதியாக முன்னெடுக்கப்படல் வேண்டும்.

☆ இந்த நாட்டு மக்களுக்கு பாதுகாப்பான நம்பிக்கையளிக்கும் வாழ்வு ஸ்தாபிக்கப்பட வேண்டும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலம்பெயர் ஊடகங்களின் சுயரூபம்

**ஐபிசி தமிழ் தொலைக்காட்சியின் நிகழ்ச்சி வழங்குநர்களின் எதிர்காலம் ஊசலாடுகிறது என்ற தலைப்பில் த. ஜெயபாலன் (தேசம் நெற்) தனது முகப்புத்தகத்தில் எழுதிய செய்திக் கட்டுரையையும் அச் செய்தி குறித்து முகநூல் நண்பர்கள் தெரிவித்திருந்த கருத்துக்கள் சிலவற்றையும் இங்கு பிரசுரம் செய்கின்றோம். ஊடகங்களின் மாயைக்குள் சிக்குண்டு நிஜ உலகத்தை தரிசிக்க முடியாமலிருக்கும் எம்மவர்களுக்கு இது சமர்ப்பணம்.**

ஐபிசி தமிழ் தொலைக்காட்சியின் முக்கிய நிகழ்ச்சி வழங்குநர்களான தினேஷ்குமார் (Dineshkumar), எம்.என்.எம் அனஸ் (Mnm Anas) உட்பட இன்னும் சிலருடைய சம்பளம் மிகவும் குறைக்கப்பட்டு புதிய தொழில் ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட கோரப்பட்டு உள்ளனர். ஐபிசி தமிழ் தெலைக்காட்சியின் செலவுக் குறைப்பு நடவடிக்கையின் ஒரு பகுதியாக இந்த சம்பளக்குறைப்பு நடவடிக்கை அமைந்துள்ளது. புதிய வெகுவாகக் குறைக்கப்படும் சம்பளத்தினுள் அவர்கள் குறைந்தபட்ச வாழ்கையைக்கூட வாழ முடியாத நிலை இருப்பதால் அவர்கள் தங்கள் தொழிலைக் கைவிட வேண்டி ஏற்படலாம் எனவும் தெரியவருகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் முள்ளிவாய்க்கால் முடிவிற்குப் பின் அவர்களின் கட்டுப்பாட்டில் இருந்த ஊடகங்களின் எதிர்காலம் கேள்விக்குறியானது. புலம்பெயர்ந்த தமிழர்களின் ஊடகங்களை தொலைத்தொடர்பு சேவைகளில் கொடிகட்டிப் பறந்த லிபரா மோபைல் மற்றும் லைக்கா மோபைல் என்பன ஆக்கிரமித்துக் கொண்டன. இதன் பின்னணியில் லெப்ரா மோபைல் ஐபிசி தமிழ் தொலைக்காட்சி, ஐபிசி தமிழ் வானொலி, ஐபிசி தமிழ் புத்திரிகை என்பனவற்றை நடாத்தி வருகின்றது. தமிழீழ விடுதலைப் புலிகளின் ஐபிசி வானொலி, ஜிரிவி, மற்றும் ஒரு பேப்பர் பத்திரிகையில் இருந்தவர்கள் லெப்ராவின் ஊடகங்களினுள் உள்வாங்கப்பட்டனர்.



த. ஜெயபாலன்

எம்என்எம் அனஸ் தீபம் தொலைக்காட்சியில் இருந்து உள்வாங்கப்பட்டார். தீபம் தொலைக்காட்சி, சன்றைஸ் தமிழ் சேவை லைக்கா மோபைலினால் நடத்தப்படுகின்றது. ஜிரிவி இல் இருந்து வெளியேறி தினேஸ் சிறிதுகாலம் தீபம் தொலைக்காட்சியிலும் பணிபுரிந்தார். தீபம் தொலைக்காட்சி லைக்காவின் கைகளில் வீழவதற்கு முன் லெப்ராவின் நிதிப் பங்களிப்புடன் இயங்கியது. ஆனால் சிறிது காலத்திலேயே லெப்ரா தீபத்துக்கான நிதிப்பங்களிப்பை நிறுத்தி. ஐபிசி தமிழ் தொலைக்காட்சிச் சேவையை ஆரம்பித்தது. தீபத்தில் இருந்து லெப்ரா வெளியேறிய போது தினேஸ் ஐ லெப்ரா தன்னோடு அழைத்துச் சென்றது.



எம். என். எம். அனஸ்

தற்போது லெப்ரா நிதிக் குறைப்பு நடவடிக்கையின் ஒரு கட்டமாக தினேஸ் உட்பட பல நிகழ்ச்சி வழங்குனர்களுக்கு புதிய வேலை ஒப்பந்தத்தை மிகக் குறைந்த சம்பளத்துடன் வழங்க முற்பட்டு உள்ளது. தேசம்நெற் க்கு கிடைத்த தகவலின்படி எம்என்எம் அனஸ் க்கு ஒப்பந்த காலக்கெடு வழங்கி, அவரை அடிப்படைச் சம்பளத்துக்கு (MINIMUM WAGE) வாரத்திற்கு 16 மணித்தியாலங்கள் பணிபுரியுமாறு கேட்கப்பட்டு உள்ளதாக தெரியவருகிறது. இவ்வாறு ஏனையவர்களது சம்பளமும் பணியாற்றும் நேரமும் சடுதியாகக் குறைக்கப்படுவதாக தேசம்நெற் க்கு கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

லண்டன் தமிழ் மீடியா லிமிட்ட் – London Tamil Media Ltd என்ற பெயரிலேயே ஐபிசி தமிழ் ஊடகங்கள் இயங்குகின்றது. இந்த நிறுவனம் நவம்பர் 15 2012 இல் இங்கிலாந்தில் வரையறுக்கப்பட்ட கொம்பனியாகப் பதிவு செய்யப்பட்டு உள்ளது. முதலாவது ஆண்டு இந்நிறுவனம் சமர்ப்பித்த கணக்கறிக்கையின்படி இந்நிறுவன்ம் £ 20,000 பவுண்கள் நட்டத்தை காட்டியிருந்தது. 2ம் வருடம் 2015 கணக்கு அறிக்கையின்படி இந்த நிறுவனம் £ 2.4 மில்லியன் பவுண்களை நட்டமாகக் காட்டி இருந்தது.



தினேஷ்குமார்

லெப்ரா தனது ஊடக கலையகத்தை சம்பளம் குறைவான தொழிலாளர் உரிமைகள் குறைவான தாயகத்தில் இருந்தோ கனடாவில் இருந்தோ எதிர்காலத்தில் இயக்க முற்படலாம் என்றும் நம்பகமான தகவல்கள் தெரிவிக்கின்றன.

லெப்ரா (Lebara) நிறுவனம் 2001ம் ஆண்டு இராசையா ஆர் லிஒன் (Rasiah R Leon), பாஸ்கரன் கந்தையா (Baskaran Kandiah), ரதீஸ்ன் யோகநாதன் (Ratheesan Yoganathan) ஆகியோரால் ஆரமபிக்கப்பட்டது. இவர்களின் பெயர்களின் முதல் இரு எழுத்துக்களின் சேர்க்கையே லெப்ரா (LeBaRa) .

இன்று இவர்கள் மூவரும் இணைந்து கடந்த பல ஆண்டுகளாக ஐரோப்பிய தமிழ் வீடுகளில் சின்னத்திரை மூலமாக மிகவும் அறியப்பட்டவர்களான எம்என்எம் அனஸ், தினேஸ் போன்றவர்களை வீட்டுக்கு அனுப்பி விடுவார்கள் என்ற நிலை உருவாகியுள்ளது.

ஐபிசி தமிழ் தொலைக்காட்சியில் தமிழ் மக்களின் உரிமைக்காக, தொழிலாளர் உரிமைக்காக எப்போதும் குரல் கொடுக்கும் தீவிர செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற சேனன் (Tu Senan) போன்றவர்களின் தமிழ் சொலிடாரிட்டி – Tamil Solidarity அமைப்பு இந்த ஐபிசி தமிழ் ஊழியர்களின் பிரச்சினைக்கு குரல் கொடுப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் பெரும்கதையாடலில் மட்டும் ஈடுபடும் ஆர்ம் செயர் மார்க்ஸிற்றுக்கள் – Arm chair Marxists தங்களுக்கு கிடைக்கும் தொலைவெளி கிடைக்காது போகும் என்பதால் பெரும்பாலும் மௌனமாக இதனைக் கடந்து செல்வார்கள் என்று எதிர்பர்க்கலாம்.

Ratnasingham Annesley (இரட்ணசிங்கம் அனெஸ்லி)

*2009 இறுதி யுத்தத்தின் போது மக்களை உசுப்பேத்தியவர்களில் இவர்கள் முக்கியமானவர்கள்...*

*...இவர்களை போன்றவர்கள் கொடுத்த பொய்யான நம்பிக்கையால் தான் இவ்வளவு அழிவு நடந்தது...*

Jananayagan Janan (ஜனநாயகன் ஜனன்)

*2009 மே 18 வரை மக்களை அதியுச்ச உசுப்பேற்றல்களுக்குள்ளாக்கி அதில் குளிர்காய்ந்ததுடன் பணத்திரட்டலை மேம்படுத்தியவையே இந்த ஊடகங்கள்.*

*இப்போதும் ஒப்பாரி நடாத்தி பணம் வசூலிக்கலாமென திட்டமிடுவது ஏமாற்றத்தையே கொடுக்கும், அதன் ஒரு கட்டமே வேலை குறைப்பு.*

Puthiyavan Rasiah (புதியவன் இராசையா)

*தொல்லை குறையும் போது ஏன் போராட வேண்டும்.? இவர்கள் இருவரும் எந்த பொதுநலம் சார்ந்த போராட்டங்களில் தம்மை இணைத்துக் கொண்டனர்? Are you alright? Jeyapalan*

Mayavan Mayilvakanam (மாயவன் மயில்வாகனம்)

*இங்கு ஜெயபாலன் சுட்டிக்காட்ட முனைவது தொழிலாளர்களின் உரிமைகள் பற்றிய விடயத்தையே. எல்லா பல்தேசிய நிறுவனங்களும் செய்வது போல செலவுக்குறைப்பில் முதலாவதாகக் கைவைப்பது தொழிலாளர்களின் சம்பளத்திலும் அவர்களின் உரிமைகளிலுமே. லிபராவும் அதைத் தான் செய்கிறது என்பதையே ஜெயபாரலன் சுட்டிக்காட்டுகிறார். அது ஒரு முக்கயமான விடயமும் கூட*

*அவர்களுடைய அரசியல் இங்கு இரண்டாவது பிரச்சினை. ஆனால் அது விமர்சிக்கப்படக் கூடாது என்பதல்ல. அதைத் தனியாக விவாதிக்கலாம். இரண்டையும் ஒன்றாக்கிக் கொள்வது சரியான பார்வையாகாது என்பது மட்டுமல்ல இவ்வாறான நிறுவனங்களின் சுரண்டலை நியாயப்படுத்துவதிலும் கொண்டு போய் விடும். அதைச் செய்ய விரும்பினால் தாராளமாகச் செய்யலாம்.*

Jeyabalan Thambirajah (ஜெயபாலன் தம்பிராசா)

*ஜெயபாலன் தம்பிராசா, லெப்ரா லைக்கா போன்ற நிறுவன்ங்கள் இன்று பல்தேசிய நிறுவுனங்களாக வளர்ந்துவிட்டன. இவர்களது வளர்ச்சி ஒன்றும் தமிழ் மக்களுக்கு பெருமை சேர்ப்பதாக இல்லை. இந்நிறுவனங்கள் தங்களுக்கு தாங்களே சேற்றைவாரி இறைத்து மற்றைய நிறுவனத்தை அம்பலப்படுத்தி வருகின்றனர். இன்று தமிழ் ஊடகங்களை இந்த் இரு நிறுவனங்களே கட்டுப்படுத்துகின்றன.*

*இங்கு பணியாற்றுகின்ற ஊழியர்கள் இந்நிறுவனங்களின் கீழுள்ள நவீன அடிமைகளே. ஆயலயஎயெ ஆயலடைஎயமயயெஅ குறிப்பிடுவது போல் இந்த ஊழியர்களின் உரிம்களுக்காக கொள்கை அடிப்படையில் குரல் கொடுப்பது மிக முக்கியம். ரவாலையஎயெ சுயளயைா குறிப்பிடுவது போல் அவர்களுடைய தற்போதைய மற்றும் கடந்தகால அரசியலில் எனக்கு துளியும் உடன்பாடு கிடையாது. ஆனால் அதற்காக அவர்களது தொழில் உரிமைகளை பல்தேசிய நிறுவனமான லெப்ரா பறிப்பதை மௌனமாக அனுமதிக்கவும் முடியாது.*

Pragash Y Rajarathnam (பிரகாஷ் வை இராஜரட்ணம்)

*"தமிழர்களுக்கு பெருமை சேர்த்தல்" வியாபாரம் என்று அடையாளப்படுத்தப்பட்டதுமே அது பங்கு தரர்களின் நலன்களை காக்க மாத்திரமே முதன்மையான குறிக்கோளோடு இயங்கும் ... இதில் ஊடகங்களும் நம்மை போன்றோரும் தான் அது நம் தமிழர் நிறுவனம் என்று தலையில் வைத்து கொண்டாடுவது ... இதில் எல்லாம் தமிழுக்கும் தமிழருக்கும் பெருமை என்றால் யான் அறியேன் தமிழ் மக்களை எங்கனம் காப்பது என்று .. முதலில் அந்த நிறுவனங்களை தமிழ் தமிழர் என்று அடையாளபடுத்துவதே தவறு அது அவர்களுக்கு மேலும் விளம்பரத்தை உருவாக்கி வருமானத்தை அதிகரிக்கும் ... வருமானம் அதிகரிக்க (இவ்விடத்தில் நான் தமிழர் வார்த்தையை உபயோகிக்கின்றேன்) தமிழர்களை பொறுத்தவரை பேராசை மதம் அதிகரிக்கும் .. பின்பு செலவு குறைப்பு என்று இருக்க பிடிக்க பார்ப்பார்கள் இது இலங்கை என்றாலும் சரி பிரித்தானிய என்றாலும் சரி. எல்லா இடமும் பொருந்தும் ..*

*ஜெயபாலன் அண்ணாவுக்கு ஒரு கொசுறு தகவல் .. நீங்கள் மேலே குறிப்பிட்ட இரு பிரிவின் இரண்டு குழுக்களும் தற்சமயம் வடக்கில் முகாமிட்டுள்ளன ... உம்பா வளர்க்க போகிறார்களாம் ... அதுக்கு மட்டும் தான் வந்திருக்கின்றார்கள் என்பதை தமிழர்கள் நம்பியே ஆகவேண்டும் ...*

*ஒன்று மட்டும் நீங்களறிந்த உண்மை ... நீங்கள் மேலே பதிந்த பதிவுக்கும் ஊழியர் நலனுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை .. ஒன்று அந்த குறிப்பிட்ட இருவருக்காக லாபி செய்கின்றீர்கள் ... இல்லை மற்ற தரப்பை எதிர்க்கின்றீர்கள் ...*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்தியில் முன்னேற்றமடைந்துள்ள நாடுகள் அனைத்திலும் சமஷ்டி வெவ்வேறு வடிவங்களில் கடைப்பிடிக்கப்படுகிறது

அமரர் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் அவர்களின் நினைவு தின நிகழ்வில் அமைச்சர் ராஜித சேனாரத்ன உரை

நாட்டின் அபிவிருத்தி பற்றியும், தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்தும் ஒரு சிங்கள அமைச்சரின் தெளிவான பார்வை



**அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும் என்பதை சிங்கள மக்களுக்குப் புரிய வைப்பதற்கு நாம் கடுமையாக உழைத்தோம் அன்றைய காலத்தில் அதனை இலகுவாக செய்திருக்க முடியும். ஆனால், தற்போது அவ்வாறான செயற்பாடு ஒன்றை முன்னெடுப்பதற்கான நிலைமை மிகவும் கடினமானதாகவும் மோசமானதாகவும் உள்ளது.**

**இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் ராஜித சேனாரட்ண தெரிவித்துள்ளார்.**

**இலங்கை தமிழரசுக் கட்சி தலைவர் எஸ்.ஜே.வி. செல்வநாயகத்தின் 40 ஆவது ஆண்டு நினைவு. தின நிகழ்வு 26.04.2017 அன்று கொழும்பு பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் நடைபெற்றது.**

**இந்த நிகழ்வில் கலந்துகொண்டு தந்தை செல்வா நினைவுப் பேருரையை ஆற்றிய ராஜித சேனாரத்ன இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.**

**அதிகாரங்கள் பகிரப்படாமையால் தான் கடந்த 70 ஆண்டுகளாக நாடு அபிவிருதியில் பின்னடைவைச் சந்தித்துள்ளது.**

**அதிகாரங்களைப் பகிரும் சமஷ்டியானது நாட்டை பிளவு படுத்தாது இது தமிழர்களுக்கு மட்டுமல்ல சிங்களவர்களுக்கும் தேவையானது.**

தந்தை செல்வா பிரிக்கப்படாத நாட்டுக்குள் தமிழ் மக்களுக்கு சமஷ்டி அடிப்படையில் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்பதில் உறுதியான கொள்கைய்யைக் கொண்டிருந்தார். அந்த முயற்சிகள் தோல்வியடைந்தன. இதனால், வேறு தெரிவுகள் இல்லாமல் தமிழீழக் கோரிக்கைய்யை அவர் தெரிவு செய்தார். இதற்கு இரண்டு பிரதான சிங்களக் கட்சி களே காரணம். இன்னமும் தேசிய இனப்பிரச்சினை க்குத் தீர்வு காணப்படாமல் இருப்பதற்கு முக்கிய காரணம் ஐக்கிய தேசியக் கட்சியும், சுதந்திரக் கட்சியும் தான். மாறி மாறி மூன்றாம் தர கீழ் தரமான அர சியலை செய்தனர்.

அவர்கள் மட்டுமல்ல பாரம்பரியமான இடதுசாரிக் கட்சிகளும் கூட ஆரம்பத்தில் தமிழ் மக்களின் உரி மைகளுக்காகப் பேசினாலும் பின்னர் இனத்துவேச அரசியலில் ஈடுபட்டனர்.

இதற்கு நான் பொறுப்பில்லை என்று சொல்ல முடியாது நானும் பொறுப்பாளிதான். இவை நடக்கும் போது நான் மாணவன்.

சமஷ்டி என்ற விடயத்தை பார்க்கையில் அது பல்வேறு வகையிலான அதிகாரங்களை பகிர்ந்த ஆட்சி முறை ம்மையையே குறிக்கின்றது. அதாவது அதிகாரங்கள் பகிரப்பட்ட ஜனநாயக ரீதியான செயற்பாடே சமஷ்டி யாகக் காணப்படுகின்றது. உலகில் பல்வேறு சமஷ்டி முறைகள் காணப்படுகின்றன.

இந்த நாட்டில் தந்தை செல்வா சிங்களப் பெருந் தலை வர்களுடன் இரண்டு ஒப்பந்தங்களைச் செய்திருந்தார். இருப்பினும் அவை கிழித்தெறியப்பட்டிருக்கின்றன. இந்த நாட்டில் இடதுசாரித் தலைவர்கள் சிறுபான்மை மக்களின் பிரச்சினைக்காகக் குரல்கொடுத்து வந்தார் கள். இருப்பினும், ஒரு நாடு இரு மொழி, ஒரு மொழி இரு நாடு என்று உரைத்த கொல்வின் ஆர்.டி. சில்வா பின்னர் 1972 இல் சிங்கள பௌத்த வாதத்தை முன்னி லைப்படுத்தி அரசமைப்பை உருவாக்கினார்.

இதனால் சிங்களத் தலைவர்கள் போன்று இடதுசாரித் தலைவர்களும் மூன்றாந்தர அரசியலுக்குள் சென்றிருந் தனர். இவ்வாறான நிலமைகளால் தான் தந்தை செல்வா வேறு தெரிவுகள் இன்றித் தீர்மானத்தை எடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தார்.

தலைசிறந்த தலைவரான விஜய குமாரணதுங்கவின் மக்கள் கட்சி ஊடாகவே நான் அரசியலுக்குள் பிர வேசித்தேன். நாங்கள் சிறுபான்மையினருக்காக குரல் கொடுத்தோம். அந்தக் காலப்பகுதியில் 13 ஆம் திருத் தச் சட்டம் தொடர்பாக பேசியிருந்தோம். சம உரி மைகள் வழங்கப்பட வேண்டும் என்பது குறித்து வலியுறுத்தியிருந்தோம். போராட்டங்களையும் நடாத்தினோம்.

இந்தப் போராட்டங்களால் எமது கட்சியைச் சேர்ந்த 107 பேர் உயிர்களைத் தியாகம் செய்துள்ளனர். நான் கூட இரண்டு துப்பாக்கி வேட்டுச் சன்னங்களை தற்போதும் சுமந்துகொண்டிருக்கிறேன். தமிழ் மக்களின் உரிமைக்காக போராடியமைக்காக எனக்கு கிடைத்த கௌரவமாகவே அதனைக் கருதுகிறேன்.

அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும் என்பதை சிங்கள மக்களுக்குப் புரிய வைப்பதற்கு நாம் கடுமையாக உழைத்தோம் அன்றைய காலத்தில் அதனை இலகுவாகச் செய்திருக்க முடியும். ஆனால், தற்போது அவ்வாறான செயற்பாடு ஒன்றை முன்னெடுப்பதற்கான நிலைமை மிகவும் கடினமானதாகவும், மோசமான தாகவும் உள்ளது.



காரணம் தமிழ் மக்களின் பிரச்சினைக்கான தீர்வு சமஷ்டி என்றே கருதப்பட்டது. ஆனால், சிங்கள மக்கள் சமஷ்டி என்பது தனிநாட்டுக் கோரிக்கைக்கான ஆரம்பப் படியாக அமையும் அதனால் நாடு பிரியும் என்று கருதினர்.

சமஷ்டி தமிழ் மக்களின் கோரிக்கை என்றே அவர்கள் கருதினார்கள். ஆகவே, அவ்வாறான தோற்றப்பாடே அவர்கள் மத்தியில் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அபி விருத்தியில் முன்னேற்றமடைந்துள்ள நாடுகள் அனை த்திலும் சமஷ்டி வெவ்வேறு வடிவங்களில் கடைப் பிடிக்கப்படுகிறது. உலகிலுள்ள பல அபிவிருத்திய டைந்த நாடுகள் சமஷ்டியைக் கொண்ட அதிகாரப் பகிர்வை பின்பற்றுகின்றன. அபிவிருத்திக்கான வழியாக அதிகாரப்பகிர்வு உள்ளது.

அதிகாரப்பகிர்வை மையப்படுத்தியதாக இருக்கும் சமஷ்டியை தென்னிலங்கை சரியாகப் புரிந்துகொள்ள வேண்டும். தேசிய அபிவிருத்திக்கான ஜனநாயக மாதிரியாகவே சமஷ்டியை கருத வேண்டும்.

சுதந்திரத்திற்குப் பின்னர் 70 ஆண்டுகளாக மத்தியில் அதிகாரங்களை வைத்திருந்தமையால் நாட்டை அபி விருத்திப் பாதையில் இட்டுச் செல்ல முடிந்ததா? இதன் காரணமாக கிராமங்களில் மேலும் மேலும் வறுமை நிலையே அதிகரித்துச் சென்றது. தமிழ், சிங்களம், முஸ்லிம் என்றில்லாது அனைத்துக் கிராமங்களும் வறுமைக்குள் காணப்படுகின்றன.

இந்த நிலைமையை சிங்கள மக்கள் உணர்ந்து கொள் வதற்குத் தவறியுள்ளனர். அதிகாரப்பகிர்வு நடைபெறா மையின் காரணமாகவே இவ்வாறான நிலமை நீடிக் கின்றது என்பதை அவர்கள் உணரவில்லை. நிலை யான சமாதானம் உள்ள நாட்டில் தேசிய அபிவிருத்தி எவ்வாறு உள்ளது என்பதை அவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். அந்த நிலைமையை அவர்களுக்கு தென்னிலங்கை அரசியல்வாதிகள் உணர்த்த வேண்டும்.

அத்துடன் கடந்த காலத்தில் தமிழ் மக்களுக்கு சமஷ்டியை வழங்குவதாக இருந்தால் தென்னி லங்கை சிங்கள மக்களுக்கும் சமஷ்டி வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டிருக்க வேண்டும். நிபந்தனையாக அது இருந்திருக்க வேண்டும். அதற்கான காரணம் தெளிவு படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

ஆகவே, தற்போதைய நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சிங்கள மக்களின் மனதையும் வெல்ல வேண்டியுள்ளது. தமிழ் இனத்தின் தந்தையாக பார்க் கப்பட்ட செல்வநாயகம் தனது கொள்கையில் எந் தளவு உறுதியுடன் இருந்தார், அவர் எவ்வாறு நடந்து கொண்டார், சிங்கள தலைவர்களுடன் எந்தளவு அர்ப்பணிப்புடன் செயற்பட்டார் என்பது சிங்கள மக்களுக்கு தெரியப்படுத்தப்பட வேண்டும்.

சகல மக்களினதும் கௌரவத்தை நாம் மீள உறுதிப் படுத்த வேண்டும். நாட்டில் எவரும் இரண்டாந் தரப் பிரஜையாக இருக்க விரும்பவில்லை. சிங்களவர் க்ளுக்கு வழங்கப்படும் சகல உரிமைகளும் த்மிழ் மற்றும் முஸ்லிம் இன்த்தவருக்கும் வழங்கப்பட வேண்டும். அரசியல்வாதிகள் என்ற ரீதியில் இந்தச் செய்தியை சகலருக்கும் தெரியப்படுத்த வேண்டும்.

அரசியல்வாதிகள் இந்தச் செய்தியை தென்னிலங் கைக்கு சொல்வதற்கு அச்சமடைகின்றார்கள் தமது வாக்குகள் குறைவடைந்துவிடும் எனக் கருது கின்றார்கள் அது தவறானதாகும். நான் போருக்கு எதிராக கருத்துக்களை முன்வைத்தேன் முஸ்லிம் களின் பிரச்சினைகளை பேசினேன் எனது வாக்கு வங்கி குறையவில்லை.

நான், களுத்துறை மாவட்டத்தில் 2004 ஆம் ஆண்டு போருக்கெதிராக குரல்கொடுத்தேன் 70 ஆயிரம் வாக்குகள் கிடைத்தன. தமிழ் மக்களின் உரிமைக் காக அதன் பின்னர் குரல் கொடுத்தேன் 2010 ஆம் ஆண்டு ஒரு இலட்சமாக எனக்குரிய வாக்குகள் அதிகரித்தன.

அதன்பின்னர் முஸ்லிம் மக்களுக்காக குரல்கொடுத் தேன் ஒரு இலட்சத்து 40 ஆயிரமாக வாக்குகள் அதிகரித்தன இதனை சிங்களத் தலைவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

ஆகவே , அவ்வாறு அச்சத்தை விடுத்து நேர்மையாக செயற்பட முன்வரவேண்டும் தற்போது இரண்டு பிரதான கட்சிகள் இணைந்துள்ள சூழ்நிலையில் நாட்டுக்கு நல்லதொரு சந்தர்ப்பம் தோன்றியுள்ளது. இதனைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். பிரச் சினையைத் தீர்ப்பதற்கான செயற்பாடுகள் முன் னெடுக்கப்பட்டுள்ளன. புதிய அரசமைப்பை உரு வாக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. அது சர்வஜன வாக்கெடுப்புக்கு விடப்படும் இருப் பினும் அது குறித்த செயற்பாடுகள் மந்த கதியில் காணப்படுகின்றமையை நான் ஏற்றுக்கொள்கின் றேன் என்றும் அமைச்சர் ராஜித் சேனாரத்ன தனது உரையில் தெரிவித்துள்ளார்.

நன்றி :- காலைக்கதிர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெனீவா தீர்மானம், போர்க்குற்ற விசாரணை பாதிக்கப்பட்டவர்களுக்கு பயன் தருமா?




*த. சிவநேசன் திருகோணமலை*

**கேள்வி: புலிகளுக்கு எதிராக அரச படைகள் நடாத்திய யுத்தத்தின்போது இடம்பெற்ற போர்க் குற்றங்கள் தொடர்பான விசாரணைகள் சந்தேகங் களுக்கு இடமின்றி உரிய முறையில் நடைபெற்று, குற்றவாளிகளைக் கண்டறிந்து, அவர்களுக்குத் தண்டனை வாங்கிக் கொடுப்பதே சரியான காரியம் என்று கூறப்பட்டு வருவது பற்றி உங்கள் கருத்து என்ன?**

பதில்: உங்களுடைய இந்தக் கேள்வியில், பல உப கேள்வி களுக்குரிய விடயங்கள் உள்ளடங்கியிருக்கின்றன.

வெறும் உணர்ச்சி பூர்வமான அணுகுமுறைகள் மூலம் நாம் தூக்கி வைத்துக் கொண்டிருக்கும் பொய்களும் போலிகளும் நிறைந்த சில மூட்டை முடிச்சுகளை இறக்கி வைக்காது அவற்றை நியாயப்படுத்தும் தற்பெருமை முனைவுகள்: அறிவுபூர்வமாக யதார்த்தங்களைப் பார்க்காது பணம், பதவி, பிரபல்யம் ஆகிய பட்டுவேட்டிகளை இறுகக் கட்டிக் கொண்டு பாமர மக்கள் கட்டியிருக்கும் கோவணத்தையும் இழப்பதற்குக் காரணமாக இருக்கும் அரசியல் பித்தலாட்டங்கள்: தம்முடன் ஒத்து ஊதாதவர்களை துரோகிகள், தமிழின விரோதிகள், சிங்கள அடிவருடிகள் என்று முத்திரை குத்தும் தகிடுதத்தங்கள்: மனித மனங்களில் உறங்கிக் கிடக்கும் பயம், கோபம், பொறாமை, பழிக்குப்பழி ஆகியவற்றை உசுப்பேத்தி தம் சொந்த நலன்களை முன்னெடுத்தல்கள் ஆகியவற்றை சற்று விடுத்து இந்தக் கேள்வியில் அடங்கியுள்ள பல உப கேள்விகளையும் உள்ளடக்கியபடி பிரதான கேள்விக்கான பதிலைப் பார்ப்போம்:-

'இலங்கை அரச படை' என்ற ஒரு தரப்பினால் மட்டுமே இலங்கையில் போர் மேற்கொள்ளப்படவில்லை. சரித்திரக் காரணங்கள் எதுவாக இருந்தாலும், இலங்கை சம்பந்தப்பட்ட வரையில் போர் என்று குறிப்பிடப்படுவது வெவ்வேறு அரசியற் தலைமைகளின் கீழ் இருந்த இலங்கை அரசிற்கும், பிரபாகரன் தலைமையில் இருந்த எல்.ரி.ரி.ஈ.க்கும் இடையிலான ஆயுதப் பிரயோக நடவடிக்கைகள் என்பதே. இங்கு விசாரணை என்பது எந்தக் காலகட்டம் சம்பந்தமானது? என்ற கேள்வி எழுகிறது. இப்போர் வெவ்வேறு கடுமையும், ஆழமும் கொண்ட அளவுகளில் ஏறத்தாழ இருபத்தாறு வருடங்களாக நடைபெற்றிருக்கிறது. எனவே, போர்க்குற்றம் சம்பந்தமான காலகட்டத்தை வெறுமனே புலிகள் தோற்கடிக்கப்பட்ட 2009ம் ஆண்டு மே மாதமும், அதற்கு முன்னர் பின்னரான சில மாதங்கள் மட்டுமே என்று கொள்ள முடியுமா? என்ற கேள்வியும் எழுகின்றது. அடுத்ததாக போர்க் குற்றங்கள் யாரால் எவ்வெவ் வகைகளில் மேற்கொள்ளப்பட்டன? என்ற கேள்வியும் எழுகிறது.

போர் நடந்த காலகட்டமான அந்த இருபத்தாறு வருடங்களிலும் போரிட்ட இருதரப்பினரும் தமக்கு எதிராக ஆயுதம் தாங்கி யுத்தம் புரிந்தவர்கள் மீது - அரசபடை புலிகளின் மீதும், அதே போல, புலிகள் அரசபடையினர் மீதும் - பல தடைவைகள் போர்த்தர்மங்களுக்கு மாறாகத் தங்களது ஆயுதங்களைப் பிரயோகித்திருக்கிறார்கள். அத்துடன் இரு தரப்பினருமே மனித உரிமைகளை உதாசீனம் செய்து நிராயுதபாணிகளின் மீதும் அப்பாவிப் பொதுமக்களின் மீதும் பாரிய வன்முறைகளைக் கட்டவிழ்த்து விட்டு மிகவும் பாதகமான படுகொலைகளைப் புரிந்திருக்கிறார்கள். மேலும் பல்வேறு வகையிலும் பொதுமக்கள் கொல்லப்படுவதற்கு காரணமாக இருந்திருக்கிறார்கள்.

சர்வதேச சட்டங்கள் - அவை பலம் வாய்ந்த நாடுகளால் அல்லது அவைகளுக்குப் பின்னணியாகவும், பினாமியாகவும் செயற்படும் அமைப்புக்களால் காலத்திற்குக் காலம் தங்களின் பொருளாதார மற்றும் பாதுகாப்பு நலன்களுக்காகவும் தங்களின் விருப்பத்திற்கு ஏற்றவாறு ஆதரவான செயற்பாடுகளை முன்னெடுக்காத நாடுகளில் ஆட்சி மாற்றம் அல்லது அதிகார மாற்றம் ஆகியவற்றின் நிகழ்ச்சி நிரல்களுக்கேற்ப - சில சமயங்களில் வலுவாகவும், சில சமயங்களில் மந்தமாகவும் அமுலாக்கப்படுபவை. இதுதான் சரித்திரத்தில் நடந்தது: இன்னமும் நடக்கிறது: இதுதான் இலங்கை சம்பந்தமாகவும் நடைபெறுகிறது.

ஆனால், அறம் - தர்மம், நியாயம் - நீதி என்ற அளவுகோல்களை வைத்துப் பார்ப்போமானால், போர் நடந்த கடந்த இருபத்தாறு ஆண்டுகளாக இலங்கை அரச படைகளாலும், புலிகளாலும் போர்க்குற்றங்கள் அளவு கணக்கின்றி மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. எனவே, விசாரணை வேண்டுமானால், அந்தக் காலகட்டத்தில் இரு தரப்பிற்கும் பொறுப்பாக இருந்தவர்கள் மீதும், அக்குற்றங்களில் ஈடுபட்டவர்கள் மீதும், உண்மைகளை வெளிக் கொணரும் முகமாக - அவர்கள் உயிருடன் இப்பொழுது இருக்கிறார்களோ இல்லையோ - **போர்க்குற்ற விசாரணைகள் மேற் கொள்ளப்படுதல் வேண்டும்.**

ஐ.நா மனித உரிமை அமைப்பின் தீர்மானமானது, இரு தரப்பினருமே போர்க்குற்றம் புரிந்திருக்கிறார்கள் எனக் குற்றம் சாட்டியிருக்கிறது. இருந்தும், போரக்குற்ற விசாரணை வேண்டும் என்று கூறும் தமிழர் தரப்பினர் பலர் அந்த விசாரணை இலங்கை அரசு மீது மட்டுமே இருக்க வேண்டும் ஏனெனில் இலங்கை ஒரு அரசு என்றும் புலிகள் ஒரு அமைப்பு மட்டுமே என்றும் வாதாடுகிறார்கள். இப்பொழுது இப்படி வாதாடும் இவர்களே, 'புலிகள் தரைப்படை, கடற்படை, விமானப்படை, பொலிஸ் படை ஆகியவற்றைக் கொண்ட தமிழீழ அரசை கிளிநொச்சியில் நடாத்துகிறார்கள்' என்று பெருமை பேசியவர்கள் – அதனால் புலிகள் அமைப்பிற்கு ஒரு அரசுக்குரிய அங்கீகாரம் அளிக்கப்பட வேண்டும் எனக் கோரியவர்கள். புலிகள் செய்த படுமோசமான அனைத்து மனிதஉரிமை மீறல்களையும், படுகொலைகளையும் 'அவர்கள் செய்தவை சரியே' என நியாயம் கற்பித்தவர்கள். அவர்களே இப்போது இந்தப் போர்க்குற்ற விசாரணை வேண்டும் என்று தமிழர் தரப்பில் கோருபவர்களில் பெரும்பான்மையினர் ஆவர்.

வெளி உலகில் மாற்றமடைந்த யதார்த்தங்களைக் கருத்தில் கொண்டு தமிழர்களின் நியாயமான உரிமைகளுக்கான போராட்டப் பாதையைச் சரி செய்யாது - சரி செய்ய விடாது, தாங்கள் பாதுகாப்பான இடங்களில் இருந்து கொண்டு, தங்களின் உயிர்களைப் பணயம் வைத்துப் போராடியவர்களை உசுப்பேத்தி, உசுப்பேத்தி, அவர்களின் உயிர்கள் மற்றும் அங்க அவயங்களின் இழப்புகளுக்கும் காரணமான புலம்பெயர் தமிழ்க் கனவான்களும், ஈழத்திலும் மற்றும் தமிழகத்திலும் புலிகளால் சுகங்கள் பெற்ற அரசியல், சமூக மற்றும் புத்திஜீவி பிரமுகர்களுமே இலங்கை அரசுக்கு எதிராக போர்க்குற்ற விசாரணை மேற்கொள்ளப்பட்டு குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்கின்றனர். தமிழர்களின் போராட்டத்தில் மேற் கொள்ளப்பட்ட அனைத்துத் தியாகங்களும் அர்த்தமற்றதாகுவதற்கும், இலங்கையில் எஞ்சியிருக்கும் தமிழர்களின் வாழ்வு மேலும் மோசமடைவதற்கும் வழிவகுத்த மேதைகளே இவர்கள். புலிகள் இருபது வருடங்களுக்கும் மேலாக போர்க்குற்றங்களை மேற்கொண்ட போது, பொதுமக்கள் மீது - சொல்லிலடங்கா அட்டூழியங்களை கட்டவிழ்த்துவிட்டபோது, அனைத்து வகைப் பட்டரீதியிலும் மனித உரிமைகளை மீறியபோது, மக்களின் அடிப்படை உரிமைகளை மறுத்து ஜனநாயக விரோதச் செயல்கள் புரியும்போது, இப்போது போர்க்குற்ற விசாரணை மேற் கொள்ளப்பட்டு குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் எனக் கோரும் இவர்கள் எங்கே போனார்கள்? அவற்றை அப்போது கண்டிக்காதவர்கள் இப்போது இலங்கை அரசின் மீதான போர்க் குற்ற விசாரணைகளை மட்டும் கோருவது உள் நோக்கங்கள் கொண்ட அரசியலே தவிர தர்மம், நியாயம், நீதி என்பனவற்றின் அடிப்படையிலானவை என எவ்வாறு கொள்வது?

போர்க்குற்ற விசாரணை யாருக்காவது பயன் தருமா? அவ்வாறான விசாரணைக்குள் யார் யாரெல்லாம் உள்ளடக்கப்பட வேண்டும்? அவ்வாறான விசாரணை எந்தக் காலப்பகுதியைக் கொண்டதாக இருக்க வேண்டும் என்பதெல்லாம் ஒரு புறமிருக்க, இலங்கையின் சட்ட அமைப்பும், இலங்கையில் தற்போது நிலவும் அரசியல் நிலைமைகளும் நடந்து முடிந்த போர்க்குற்ற விசாரணைகளை எந்தளவு தூரம் உரிய முறையில் சந்தேகங்களுக்கு இடமின்றி நடாத்துவதற்கு இடமளிக்கும் என்ற கேள்விகளும் உள்ளன.

போர்க்குற்ற விசாரணைக் குழுவில் வெளிநாட்டைச் சேர்ந்த நீதிபதிகளும் அங்கம் வகிக்க வேண்டும் என்பது விசாரணை வேண்டுபவர்களின் ஒரு முக்கிய கோரிக்கையாக விடுக்கப் படுகிறது. சிங்களப் பெரும்பான்மையோர் தரப்பில் போர்க்குற்ற விசாரணை என்பது எந்த வகையிலும் தேவையற்றது என்றும், இலங்கையை பிளவுபடுத்த முனைந்தவர்களுக்கு எதிராகப் போராடி இலங்கை பிளவுபடாது காப்பாற்றியவர்களைக் குற்ற வாளிக் கூண்டில் ஏற்றி விசாரணைகளுக்கு உட்படுத்த அனுமதிக்க முடியாது எனவும் வலுவான குரல்கள் உள்ளன. அரசாங்கத்திலும் எதிர்க்கட்சிகளாகவும் உள்ளவர்களிற் பெரும்பான்மையினர் போர்க்குற்ற விசாரணைகள் நடைபெறுவதாயினும் அதில் வெளிநாட்டினரை உள்ளடக்க முடியாது என்பதில் தீவிரமாக உள்ளனர்.

போர்க்குற்ற விசாரணைகள் பற்றிய விசாரணைகள் என்ற பெயரில் நடைபெறும் அரசியலைப் பயன்படுத்தி அரச அதிகாரத்தைக் கைப்பற்றி மீண்டும் ஒரு சர்வாதிகார பயில்வானாக வருவதற்கு மகிந்த ராஜபக்சாவும் அவரது ஆதரவாளர்களும் காத்துக் கிடக்கிறார்கள். அதற்கு இடமளித்து விடக் கூடாது என்பது இப்போது அரசாங்கமாக உள்ளவர்களின் கவலை. போரின் விளைவுகளில் ஒன்றாக முன்னெப்பொழுதும் இல்லாத வகையில் இப்போது பலமான நிலையில் உள்ள இராணுவ அதிகாரிகள், போர்க் குற்ற விசாரணைகள் எதுவும் இடம்பெற்றால் அரசாங்கத்திற்கு எதிராகவோ அல்லது அரசாங்கத்தைப் பலவீனமாக்கவோ செயற்படும் நிலைமைகள் ஏற்பட்டு விடும் என்ற அச்சம் கொண்டிருக்கிறார்கள் என்பது தெரிகிறது. ஆட்சி மாற்றத்தின் பின்னர் நீர்த்துப் போன ஐ.நா. மனித உரிமைகள் அமைப்பின் தீர்மானங்கள் நடைமுறையாவதற்கு இன்னும் இரண்டு ஆண்டு கால அவகாசம் கிடைத்தால் போர்க் குற்ற விசாரணை சர்வதேச அளவில் தூர்ந்து போகும் ஒன்றாக இருக்கும் என்ற எதிர்பார்ப்பும் மைத்திரி - ரணில் கூட்டரசாங்கத்தின் எண்ணங்களாக உள்ளன என்பதுவும் தெளிவு. அதற்கான வாய்ப்பும் ஜெனீவாவினால் வழங்கப்பட்டிருக்கின்றது.

இந்த நிலையில் போர்க்குற்ற விசாரணைகள் பற்றிய கோரிக்கைகள் அல்லது அதற்கு எதிரான குரல்கள் என்பனவெல்லாம் இலங்கையின் பல்வேறு கட்சிகளினதும் தேர்தல் அரசியலுக்கு உரிய ஒன்றாகவும், சர்வதேச நாடுகளிற் சில அதனை ஆதரிப்பதுவும் சிலநாடுகள் அதனை எதிர்ப்பதுவும் இலங்கையோடு அந்த நாடுகள் தங்கள் நலன்களை இணைத்துக் கொள்வதற்கு பயன்படுவதாகவும் உள்ளதே தவிர, இலங்கை வாழ் மக்களில் எவருக்கும் எந்தவித பயனையும் தராது. போர்விசாரணையை எதிர்பார்க்கும் அப்பாவித் தமிழர்கள் கடைசியில் இலவு காத்த கிளிகளாகவே ஆவர். எல்லாவற்றிற்கும் மேலாக போர்க் குற்ற விசாரணைகள் தொடர்பான வாதப்பிரதிவாதங்கள் இன முரண்பாடுகளை மேலும் கூர்மைப்படுத்தி, இனங்களுக்கிடையேயான நல்லிணக்கம் ஏற்பட முடியா நிலைமைகளை வளர்ப்பதையுமே சாதிக்கும்.

ஜெனீவாத் தீர்மானம், போர்க்குற்ற விசாரணை என்பவற்றை தமிழ் மக்களுக்கான 'சர்வரோக நிவாரணி'யாகக் காட்டி அவற்றை ஆதாரமாக வைத்து தமிழ் அரசியலை நகர்த்துபவர்களின் கையாலாகாத்தனத்தை பெரும்பான்மையான தமிழர்கள் புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை. எதுவித புதிய சிந்தனைகளும், புதிய அணுகுமுறைகளும் இல்லாது தேய்ந்து தூர்ந்து போன பயனற்ற பாதையில் தமிழர்கள் அரசியல் பயணம் செய்வது அரசியல் தீர்வுக்கோ, போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் புதிய நம்பிக்கைகளோடு சமூக பொருளாதார முன்னேற்றங்களை அடையவோ வழிவகுக்காது. உறவுகளையும் உடைமைகளையும் இழந்தவர்கள் கொண்டிருக்கும் வலி உணர்வுகளும் ஆத்திரங்களும் நியாயமானவையே. ஆனால், அதற்காக பழி வாங்கும் உணர்ச்சிகள் மேலும் அவர்களையே அழிவுகளுக்கும் இழப்புகளுக்கும் உள்ளாக்கும் என்பதே இங்குள்ள யதார்த்தம்.



லின்டன் ஜோன்சன்



எட்வார்ட் ஹூவர்

*க. ஜெயக்குமாரன் யாழ்ப்பாணம்*

**கேள்வி: இரா. சம்பந்தன், மாவை சேனாதிராஜா, சுமந்திரன் உட்பட்ட தமிழரசுக் கட்சித் தலைமைகளைத் தொடர்ச்சியாகவும் கடுமையாகவும் விமர்சித்தும், சாடியும் வரும் சுரேஷ் பிரேமச்சந்திரன் இன்னமும் எப்படி கூட்டமைப்பில் அங்கத்துவம் வகித்துக்கொண்டிருக்கிறார் ?**

பதில்: லின்டன் ஜோன்சன் (Lyndon Johnson) முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி. அப்பொழுது அமெரிக்க உளவுத்துறை அமைப்பின் உயர் அதிகாரியாக இருந்தவர் எட்வார்ட் ஹூவர் (Edward Hoover) என்பவர். லின்டன் ஜோன்சனுக்கு எதிரான கருத்துக்களை எட்வார்ட் ஹூவர் தெரிவித்திருந்தார். உங்களுக்கு எதிராக அவர் பேசியும் அவரை ஏன் விலக்காமல் இன்னமும் அதிகாரத்தில் வைத்திருக்கிறீர்கள்? என்று லின்டன் ஜோன்சனிடம் கேள்வி எழுப்பப்பட்டபோது அதற்கு அவர் அளித்த பதில்:- 'ஹூவர் எனது கூடாரத்துக்கு வெளியிலிருந்து என் கூடாரத்திற்குள் சிறுநீர் கழிப்பதைவிட, அவரை எனது கூடாரத்திற்குள் வைத்துக் கொண்டு வெளியில் சிறுநீர் கழிக்க விடுவது நல்லது' ("I would rather keep Hoover inside my tent pissing out, than outside the tent pissing in").

இதனை சம்பந்தரும் படித்திருப்பார் என நினைக்கிறேன்.

அபிமன்யு பதில்கள் கேள்வி பதில் பகுதிக்கு
உங்கள் கேள்விகளை அனுப்ப வேண்டிய முகவரி :

அபிமன்யு பதில்கள்
கண்ணோட்டம்
இல: 294 A. கண்டி வீதி
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரு. சாம் தம்பிமுத்து
மட்டக்களப்பு

தமிழ் இனத்தின் அரசியல், சமூக, பொருளாதார விடுதலை வேண்டியும்
ஜனநாயக உரிமைகளை மீட்டெடுப்பதற்குமான போராட்டத்தில்

## தம் உயிரை அர்ப்பணித்த, தோழர்கள், ஆதரவாளர்களை

# நினைவு கூருவோம்

தமிழ் மக்களின் விடிவிற்கான போராட்டத்தில் மே மாதத்தில் உயிர்நீத்தவர்களில் நாம் சேகரித்துள்ள படங்கள் இவை.
மக்களின் விடிவிற்காக உயிர் ஈந்த அனைவரதும் உழைப்புக்களும் தியாகங்களும் வீண்போகாது அவர்கள் முன்னெடுத்துச் சென்ற மக்களின் சுபிட்சமான எதிர்காலத்திற்காக உழைப்போம் என்ற உறுதியோடு அனைவருக்கும் அஞ்சலி செலுத்துவோம்



தோழர் மதன்லால்
திருகோணமலை


| பெயர் | தோழர் | இறப்பு | வசிப்பிடம் |
|---|---|---|---|
| பா.சன்னதிராஜா | சந்திரன் | 04.05.1988 | ஊர்காவற்துறை |
| | ஸ்ரீபன் | 19.05.1986 | பலாலி |
| | கங்கா | 19.05.1986 | மயிலிட்டி |
| | பிரகாஷ் | 23.05.1986 | பருத்தித்துறை |
| மதிவதனி | ஷோபா | 04.05.1985 | யாழ்ப்பாணம் |
| விஜயகுமார் | ரஞ்சன் | 04.05.1985 | யாழ்ப்பாணம் |
| தவராசா | அரவிந்தன் | 04.05.1985 | காரைநகர் |
| க. ஜெயந்தன் | ஜெயந்தன் | 15.05.1989 | நெல்லியடி |
| சாம் தம்பிமுத்து | | 07.05.1990 | காரைதீவு |
| விஜயகுமார் | கணேஸ் | 04.05.1985 | காரைதீவு |
| சுந்தரலிங்கம் | வேலு | 04.05.1985 | கல்லாறு |
| சங்கரபிள்ளை | பாலா | 31.05.1985 | வந்தாறுமுலை |
| தேவநாதன் | நிர்மல் | 10.05.1985 | மண்டூர் |
| சுந்தரலிங்கம் | | 05.05.1987 | பெரியகல்லாறு |
| கோபாலநிதி | நிதி | 15.05.1987 | பேத்தாளை |
| யோகராஜா | சின்ன சூரி | 28.05.1989 | வந்தாறுமுலை |
| தேவராஜன் | சுரேஸ் | 28.5.1989 | கண்ணிங்கேணி |
| செல்வராசா | சின்னவன் | 04.05.1986 | கந்தளாய் |
| உதயகுமார் | நாதன் | 16.05.1986 | கந்தளாய் |
| பிறேமன் | சின்னவன் | 16.05.1986 | நிலாவெளி |
| நித்தியாநந்தம் | கண்ணன் | 19.05.1989 | கட்டைப்பறிச்சான் |
| சிவலிங்கம் | மனோ | 19.05.1989 | மூதூர் |
| வெங்கடசாமி | மதன்லால் | 19.05.1989 | திருகோணமலை |
| அர்ஜுனா | அர்ஜுனா | 19.05.1989 | திருகோணமலை |
| தவராசா | நகுலன் | 08.05.1989 | தண்ணீரூற்று |
| சிவகுமார் | பாசன் | 08.05.1989 | சுதந்திரபுரம் |
| அமலதாஸ் | அன்பு | 08.05.1989 | புதுக்குடியிருப்பு |



தோழர் வேலு
கல்லாறு



தோழர் சின்னவன்
திருகோணமலை



தோழர் கணேஸ்
காரைதீவு

காரைநகரில் 03.05.1985
அன்று இவர்களுடன்
தோழர் ரஞ்சன் - யாழ்ப்பாணம்
தோழர் அரவிந்தன் - காரைநகர்
ஆகிய இருவரும் உயிரிழந்தனர்.



தோழர் சோபா
யாழ்ப்பாணம்

1990 ஆம் ஆண்டு புலிகளால் கைது செய்யப்பட்டு புலிகளின் பல்வேறு சித்திரவதை முகாம்களிலும் தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டு இறுதியாக துணுக்காயிலிருந்த புலிகளின் சித்திரவதை முகாமிலிருந்து தப்பிவந்த சமரன் புலிகளின் வதை முகாம்கள் பற்றி முதன் முதலில், புலிகள் ஆதிக்கத்தில் இருந்த காலத்திலேயே துணிச்சலாக வெளிச்சத்திற்கு கொண்டுவந்தவர். "ஆயுதங்கள் மேல் காதல் கொண்ட மன நோயாளிகள்" என்ற சிறு நூல் மூலம் புலிகளின் சித்திரவதை முகாம்கள் குறித்தும் தானும் தன்னுடன் சிறைப்பட்டிருந்த சக கைதிகளும் அனுபவிக்க நேர்ந்த சித்திரவதைகள் பற்றியும் அவர் எழுதியிருந்தார்.

"புலிகள் எத்தகைய கொடுமைகளை செய்திருக்கிறார்கள் என்பதை அம்பலப்படுத்தும் இந்தப் பதிவு அரசையோ மற்ற அமைப்புக்களையோ நியாயப்படுத்தும் நோக்கிலானது அல்ல" என அந்நூலில் தனது நிலைப்பாட்டையும் தெளிவுபடுத்தியிருந்தார்.

இந்நூலின் பிரதிகள் பலவற்றை புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த சலீம் கிளிநொச்சியில் வைத்து எரித்ததை நேரில் கண்டதாக அந்தோனிப்பிள்ளை என்பவரின் குறிப்பை முகநூலில் காண முடிந்தது.

புலிகளால் கைது செய்யப்பட்டு புலிகளின் துணுக்காய் வதை முகாமில் சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டு காணாமலாக்கப்பட்டவர்களின் விபரங்களை திரட்டும் சமரன் அவர்களின் இந்த முயற்சி மேலும் பல உண்மைகளை வெளிச்சத்திற்கு கொண்டுவரும் என்பதில் ஐயமில்லை.

ஆனால், துணுக்காய் முகாம் பற்றி மாத்திரமன்றி கொயிலாகண்டி, ஆனைக்கோட்டை, மிருசுவில், மட்டுவில் போன்ற இடங்களிலிருந்த புலிகளின் வதைமுகாம்களில் சிறைப்பட்டு காணாமலாக்கப்பட்டவர்கள், பாதிக்கப்பட்டவர்களின் விபரங்களும் திரட்டப்பட வேண்டும் என அந்தோனிப்பிள்ளை அவர்கள் குறிப்பிட்டிருப்பதும் கவனத்திற்குரியதாகும்.




## காணாமல் ஆக்கப்பட்டோர் விபரம்

### ஆயுதங்கள் மேல் காதல் கொண்ட மனநோயாளிகள்

1990ல் புலிகளால் கைது செய்யப்பட்டு (துணுக்காய் வதைமுகாமில் சித்திரவதை செய்யப்பட்டு) கொல்லப்பட்டவர்களின் விரபங்கள் ஒரு புத்தகப் பதிவிற்காக சேகரிக்கப்படுகிறது இப்புத்தகம் ஐக்கிய நாடுகள் சபை, சர்வதேச மன்னிப்பு சபை மற்றும் உலகில் உள்ள சகல மனித உரிமை அமைப்புகளுக்கும் அனுப்பி வைக்கப்படும். பெயர், முகவரி அத்துடன் புகைப்படம் இருந்தால் கீழ்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்

samaranbook@gmail.com

உங்களுக்கான நியாயம் கிடைக்க எம்மாலான சிறு முயற்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலம்பெயர் தேசங்களில் போலி அரசியல்



கல்வியைக் கவனத்திற்கொண்டு ஐரோப்பிய நாடுகளிலிருந்த புலம்பெயர் தமிழர்கள் பலர் பிரித்தானியாவில் குடியேறி உள்ளனர். பிரித்தானியா ஐரோப்பிய ஒன்றியத்திருந்து வெளியேறும்போது இம் மக்களின் நலன்கள் குறித்து யார் பேசுவார்கள்?

**அன்பார்ந்த வாசகர்களே.**

தூர தேசத்திலிருந்து உங்களுடன் இப் பத்திரிகை மூலம் பேசுவது மிகவும் மகிழ்ச்சிகரமானது. மனதிற்கு இதமானது. ஏனெனில், எனது மனதை அழுத்தும் சில பிரச்சனைகளுக் காகவாவது அவை வடிகாலாக அமைந்து விடுகிறது. இது ஒன்றும் திணிப்பு அல்ல. பதிலாக சகல வழிப் பேராட்டங் களும் அர்த்தம் இழந்து துன்பம் என்பதே மீதியாக உள்ளதே என்ற ஆதங்கத்தில் வாழும் எமது தாயக உறவுகள் புலம் பெயர் தமிழர்களாவது தமது பங்களிப்பைத் தருவார்களா? என எதிர்பார்த்திருப்பது நியாயமாக இருப்பினும் தமிழீழம் பொங்கலுக்கும், வருடப் பிறப்பிற்கும் வருமெனக் காத்திருந் தது போல, புதிய தீர்வு வரும் என தொடர்ந்தும் காத்திருப்பது எவ் வகையிலும் அர்த்தமற்றது என்பதை எச்சரிப்பது பொறுப் புள்ள மனிதன் ஒவ்வொருவரினதும் கடமையாகிறது.

பிரித்தானிய அரசு சர்வதேச விவகாரங்களில் தமது கொள் கைகளை வகுக்கு முன்னர் சம்பந்தப்பட்ட நாடுகளின் நலன் களில் அக்கறையுடன் செயற்படும் அமைப்புகள் இருப்பின் அவற்றை அவ்வப்போது தமது வெளிநாட்டு அமைச்சிற்கு அழைத்து கலந்துரையாடுவார்கள். அக் கலந்துரையாடல் களின்போது தமது அரசின் நிலைப்பாடுகளை ஓரளவு விபரிப்பார்கள். இது போன்ற சந்திப்பினை தமிழ், சிங்கள அமைப்புகளையும் அழைத்து நடத்துவார்கள். இவ்வாறான சில சந்திப்புகளில் நானும் கலந்துள்ளேன். இந்த அனுபவங் களைத் தற்போது பகிர்ந்து கொள்வது பொருத்தமென எண்ணுகிறேன்.

தமிழ்ப் பிரதேசங்களில் புலிகளின் ஆதிக்கம் வலுவாக இருந்தபோது, அப் பிரச்சனையில் தனது இருப்பை உறுதிப் படுத்த அச் சந்திப்புகளைப் பிரித்தானிய அரசு பயன்படுத்தியது. அதே போன்று பிரித்தானிய அரசின் உயர்மட்ட தொடர்பு களை ஏற்படுத்த தமிழ், சிங்கள அமைப்புகளும் செயற் பட்டன. குறிப்பாகப் போர்க் காலத்தின் போது புலிகளால் நடத்தப்பட்ட உண்ணாவிரதம், ஆர்ப்பாட்டம், மாவீரர் தினம் போன்றவற்றில் புலம்பெயர் தமிழ் மக்கள் அதிகளவில் கலந்துகொண்டனர். அதே போன்று பிரித்தானிய பிரதான அரசியல் கட்சிகள் தத்தமது வாக்கு வங்கியை நிரப்பும் நோக்குடன் அவர்களது அழைப்புகளில் தவறாது கலந்து கொண்டனர். புலி அரசியலிற்குள் ஊடுருவியிருந்த சந்தர்ப்ப வாத சக்திகள் கூட்டங்களில் கலந்துகொண்ட மக்களைத் தமது கட்டுப்பாட்டிற்குள் உள்ள வாக்கு வங்கியாக காட்டவும் தவறவில்லை. இவ்வளவு பெரும் திரளான பிரித்தானிய மக்கள் கட்சிக் கூட்டங்களில் கலந்து கொள்வது குறைவு. இந் நிலையில் புலிகளால் அழைக்கப்பட்ட கூட்டங்களில் கலந்து கொண்ட சில பிரித்தானிய அரசியல்வாதிகள் உணர்ச்சி


டேவிட் கமரோன்

வசப்பட்டு தமிழீழக் கோரிக்கையை ஆதரித்துப் பேசிய சந்தர்ப்பங்களும் உண்டு. இச் செய்திகளை தொலைக்காட்சி களிலும், இணையத்தளங்களிலம் பல நாட்களுக்கு அரை த்த நாட்களும் உண்டு. இதனைச் சாதகமாகப் பயன்படுத்திய தமிழர்களில் ஒரு சாரார் மிகவும் திட்டமிட்ட அடிப்படையில் பிரித்தானிய பிரதான அரசியல் கட்சிகளுக்குள் படிப்படியாக நுழையத் தொடங்கினர்.

கன்சவேட்டிவ் தமிழர், தமிழ் தொழிற்கட்சியினர், தமிழ் லிபரல் ஜனநாயகவாதிகள் எனப் புதிய நாமங்களோடு தத்தமது பகுதியிலுள்ள கட்சிகளுள் நுழைந்தனர். இவற் றைத் தொடர்ந்து தமிழர்கள் செறிந்து வாழும் பகுதிகளிலுள்ள உள்ளூராட்சிப் பிரிவுகளுக்குள் தேர்தலில் போட்டியிட்டனர். இவை யாவற்றிற்கும் விடுதலைப்புலிகள் அமைப்பின் போர் வையையே பயன்படுத்தினர். தாயகத்தில் தமிழரசுக் கட்சி, கூட்டமைப்பு போன்றன எவ்வாறு பாராளுமன்ற எண்ணிக் கைப் பிரச்சனையைப் பயன்படுத்தி தமது பேரம் பேசும் அர சியலை நடத்தினார்களோ, அதே போன்று தாம் புலம்பெயர் தமிழர்களுக்கு உத்தரவிட்டால் சில கட்சிகளைத் தம்மால் தோற்கடிக்க முடியும் என்ற அளவிற்கு பேரம் பேசும் பலத்தை இவர்களும் அதிகரித்தனர்.

இந்த அதிகார போட்டியில் சில தமிழ் வர்த்தக நிறுவனங் களும் இணைந்தன. குறிப்பாக தொலைபேசி கம்பனிகள் சில இதில் இணைந்து தமது வருமானங்களைப் பெருக்கிய தோடு, பிரித்தானிய அரசியல் கட்சிகளுக்கு கட்சி நிதிகளை பெருமளவு வழங்கி தமது அரசியல் செல்வாக்கை வளர்த் தன. இதன் ஒரு அங்கமாக முன்னாள் பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரோன் வடபகுதி சென்ற விவகாரமாகும். அதே போன்று சினிமா துறையில் தற்போது ஈடுபட்டுள்ள இன் னொரு தொலைபேசி நிறுவனம் இலங்கையில் சில வீடுகளைக் கட்டி அவற்றைத் திறந்து வைக்க பிரபல நடிகர் ரஜினிகாந்த் அழைக்கப்பட்டிருந்தும் உள்ளூர் அரசியல் நெருக்கடிகள் தடுத்து விட்டன. இவை அதிகாரத்தினை எட்ட வகுக்கப்படும் தந்திரங்களாகும்.

இத்தனை போடுகைகளும் எதற்கு என எண்ணுகிறீர்களா? தொடர்ந்து பொறுமையாக படியுங்கள்.

பிரித்தானிவில் திடீரென தேர்தல் அறிவிக்கப்பட்டிருக்கிறது. கடந்த 2016ம் ஆண்டு யூன் மாதம் பிரித்தானியர் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியேறுவது குறித்த வாக்கெடுப்பு இடம்பெற்றது. இதில் 52 சதவீத மக்கள் வெளியேறும்படி




வாக்களித்தார்கள். இவ் வாக்கெடுப்பைத் தொடர்ந்து வெளி நாட்டவர்களுக்கு எதிரான தாக்குதல்கள் அதிகரித்தன. இங் குள்ள வேலையில்லாத் திண்டாட்டம், பாடசாலைகளில் இடப் பற்றாக்குறை, வைத்தியசாலைகளில் நெருக்கடி, சம்பளக் குறைப்பு என பல நெருக்கடிகளுக்கு வெளிநாட்டவர்களே காரணம் என தீவிர வலதுசாரி சக்திகள் குற்றம் சுமத்தின. இதனைச் சாதகமாகப் பயன்படுத்திய பிரித்தானிய அரசு ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியேறுவதைத் துரிதப் படுத்தியது. பாராளுமன்றத்தின் ஆதரவில்லாமல் அரசிற்குரிய விசேஷ அதிகாரத்தைப் பயன்படுத்தி ஐரோப்பிய ஒன்றியத் துடன் பேச்சுவார்த்தைகளை நடத்தியது. இதன் காரணமாக பிரஜை ஒருவர் உயர் நீதிமன்றத்தில் அரசு பாரளுமன்ற ஆதரவில்லாமல் செயற்படுவது பாராளுமன்ற ஆட்சிமுறை யினை மீறுவதாக வழக்குத் தொடர்ந்தார். பாராளுமன்றத் தின் ஒப்புதல் இல்லாமல் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியேறுவது சட்ட விரோதமானது என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

பாராளுமன்றத்தில் ஆட்சியை நடத்திய கன்சவேட்டிவ் கட்சிக்குள் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியேறுவதற்கு போதுமான ஆதரவு இருக்கவில்லை. அதே போன்று பிரபுக் கள் சபையிலும் ஆதரவில்லை. பாராளுமன்றத்தில் போது மான ஆதரவற்ற நிலையில் முன்னாள் பிரதமர் டேவிட் கமரோனின் ராஜினாமாவைத் தொடர்ந்து பிரதமராகக் கட்சியால் தெரிவு செய்யப்பட்ட திரேஷா மே அவர்களால் ஐரோப்பிய வெளியேறுதலைத் தாம் எதிர்பார்த்த வகையில் எடுத்துச் செல்ல முடியவில்லை.

**வாசகர்களே!**

சர்வதேச் பொருளாதார வளர்ச்சியில் இந்தியா, சீனா, பிரேசில், தென்னாபிரிக்கா போன்ற நாடுகள் முன்னேறி வருவதால் அமெரிக்கா, பிரித்தானியா, ஐரோப்பிய ஒன்றியம் போன்ற நாடுகளில் பெரும் பொருளாதார சரிவு ஏற்பட்டுள்ளது. கூடவே இந் நாடுகள் மத்திய கிழக்கில் அமைதியற்ற நிலை யினை ஏற்படுத்தியதால் பெரும் தொகையான மக்கள் அகதிகளாக ஐரோப்பாவை நோக்கி வருகின்றனர். ஏற்கென வேயுள்ள பொருளாதார நெருக்கடி, அகதிகள் தொகை அதி கரிப்பு என்பன இங்குள்ள அரசியலில் குழப்பத்தை ஏற்படுத் தியுள்ளன. தீவிர வலதுசாரி சக்திகள் பலமடைந்துள்ளன. பிரித்தான்யா, அமெரிக்காவினைத் தொடர்ந்து ஐரோப்பிய நாடுகள் பலவற்றில் வலதுசாரி சக்திகள் ஆட்சியைக் கைப்பற்றும் நிலை காணப்படுகிறது.

இந் நெருக்கடிகளுக்கு மத்தியில் தமது குடும் பங்களின் கல்வியைக் கவனத்திற் கொண்டு ஐரோப்பிய நாடுகளிலிருந்த புலம்பெயர் தமிழர்கள் பலர் பிரித்தானியாவில் குடியேறி உள்ளனர். பிரித்தானியா ஐரோப்பிய ஒன்றியத்திருந்து வெளி யேறும்போது இம் மக்களின் நலன்கள் குறித்து யார் பேசுவார்கள்? தத்தமது சுயநலன்களுக்காக கன்ச வேட்டிவ் தமிழர், தமிழ் தொழிற்கட்சியினர், தமிழ் லிபரல்கள் என முத்திரை குத்தி போலி அரசியலை நடத்தியவர்கள் தற்போது மௌனமாகியுள்ளனர்.

எதிர்வரும் யூன் மாதம் 8ம் திகதி பிரித்தானியாவில் இடம்பெறப் போகும் தேர்தல் புலம்பெயர் தமிழ்ர் களுக்கு மிக முக்கியமானது. இத் தேர்தலில் கன்ச வேட்டிவ் கட்சி வெற்றி பெறுமானால் பிரித்தானியா சர்வதேச மனிதஉரிமைச் சட்டங்களை நடைமுறை ப்படுத்தாது. இதனால் ஐரோப்பாவிலிருந்து வந்த தமிழ் ஐரோப்பியர்களுக்கு பாதுகாப்பு இல்லை. பிரித்தானியாவிலுள்ள தமிழ் அகதிகளுக்குப் பாதுகாப்பு இல்லை. பல அகதி விண்ணப்பங்கள் நிராகரிக் கப்படுவதற்கான வாய்ப்புகளே அதிகம் உண்டு. ஏற்கெனவே அகதி அந்தஸ்து கிடைத்தவர் கள் தமது குடும்பங்களோடு இணைவதற்குப் பல கட்டுப்பாடுகள் வரலாம்.

**வாசகர்களே!**

பிரித்தானிவிலுள்ள புலம்பெயர் மக்களைத் தமது குறுகிய அரசியல் நலன்களுக்காக பயன்படுத்திய தமிழ் அமைப்புகள் இத் தேர்தலில் எவ்வாறு நடந்துகொள்ளப் போகின்றன? குறிப்பாக தம்மை கன்சவேட்டிவ் தமிழர்கள் என அடையாளப் படுத்தி மார்தட்டி வரும் இவர்கள் தமது நிலைப்பாட்டைப் பகிரங்கப்படுத்த வேண்டும். மரணமடைந்த தம் உறவுகளின் அஞ்சலிக்காக சென்ற மக்களைத் தமது வாக்கு வங்கி என ஏமாற்றிய அரசியல் முடிவுக்கு வரவேண்டும்.

பிரித்தானிய வெளிநாட்டு அமைச்சுச் சந்திப்புகளின் போது தம்மைத் தனித் தரப்பாக அங்கீகரித்து தம்முடன் தனியாகப் பேசவேண்டும் என தொடர்ந்து வற்புறுத்தி வரும் இச் சக்திகள் தமக்குப் பின்னால் மாபெரும் மக்கள் சக்தி இருப்பதாக


திரேஷா மே

காட்டும் மாயை அரசியலிருந்து வெளியே வரவேண்டும். பிரித்தானிப் பொதுத் தேர்தல் தமிழர்களைப் பொறுத்தவரை யில் மிக முக்கியமானது. கன்சவேட்டிவ் கட்சியின் இனவாத அரசியல் அம்பலப்படுத்தப்பட வேண்டும். கன்சவேட்டிவ் தமிழர்கள் என்ற முகமூடி அரசியலை உடைக்க இவர்கள் முன்வரவேண்டும். இல்லையேல் இந்த அரசியல் துரோ கத்தை புலம்பெயர் தமிழர்கள் ஒரு போதும் மன்னிக்க மாட்டார்கள்.

தாயகத்தில் செயற்படும் அரசியல் சக்திகள் இவ் இரட்டை வேட அரசியலை நன்கு புரிந்து கொள்ள வேண்டும். தமிழ் மக் களின் ஜனநாயக உரிமைப் போராட்டங்கள் இவ்வாறான தீய சக்திகளால்தான் வலுவிழந்து, ஆதரவிழந்து கொச்சைப் படுத்தப்படுகின்றன. போர்க் குற்ற விசாரணைக்கு மேலும் கால அவகாசம் வழங்கவேண்டுமென இலங்கை அரசு கோரியபோது கூட்டமைப்பின் தலைமை அதற்கு ஆதரவாக பேசியது. ஆனால், சில சக்திகள் எதிர்த்தன. அரசைக் காப் பாற்ற கூட்டமைப்பு உதவுவதாக குற்றம் சுமத்தின. ஆனால் இன்று அரச அமைச்சர்களுடன் வெளிநாடுகளில் சுற்றுப் பயணம் செய்யும் சிறீதரன் போன்றோர் ஐரோப்பிய சந்தை களில் இலங்கைப் பொருட்களைச் சலுகை விலையில் சந்தைப்படுத்த ஆதரவு கோரி வருகிறார். இந்த மாற்றத் திற்கான அடிப்படை என்ன? அரசியலா? சுயநலமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலாலி விமான நிலையம், காங்கேசன்துறை துறைமுகம் மக்களின் பயன்பாட்டுக்கு வர வழி செய்க

## எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் அவர்களுக்கு யாழ்ப்பாண வணிகர் கழகம் கடிதம்




பலாலி விமான நிலையத்தையும் காங்கேசன்துறை துறைமுகத்தையும் மிக விரைவில் சீரமைத்து பொதுமக்களின் பயன்பாட்டுக்கு ஏற்றதாக மாற்றியமையுங்கள். இதற்கான நடவடிக்கைகளை உடன் எடுங்கள். இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தனிடம் யாழ்ப்பாண வணிகர் கழகம் கோரியுள்ளது. இது தொடர்பாக கடிதம் ஒன்றை வணிகர் கழகம் எதிர்க்கட்சித் தலைவருக்கு அனுப்பி வைத்துள்ளது.

கடந்த காலங்களில் உதாசீனம் செய்யப்பட்ட பலாலி விமான நிலையமும் காங்கேசன்துறை துறைமுகமும் போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு சுமுகமான கூட்டாட்சி நிலவும் இந்தக் காலத்தில் அபிவிருத்தி செய்யவேண்டிய தேவையுள்ளது. பலாலி விமான நிலையத்தை பிராந்திய விமான நிலையமாக அபிவிருத்தி செய்வதற்கு அரசுக்கு அதிக சிரமங்கள் தேவையில்லை. போர் ஏற்படுவதற்கு முன்பாகவே குறித்த விமான் நிலையம் மிகச் சிறப்பாக பராமரிக்கப்பட்டு வந்துள்ளது. அபிவிருத்திக்கான நிலப்பரப்பையும் கொண்டுள்ளமை மேலும் வசதியாகவுள்ளது. பலாலி விமான் நிலையத்தை பிராந்திய விமான நிலையமாக அபிவிருத்தி செய்தால் எமது மக்களுக்குக் கிடைக்கக்கூடிய நன்மைகளை இங்கு குறிப்பிட விரும்புகின்றோம்.

பெருமளவு தமிழ் மக்கள் புலம்பெயர்ந்து பல நாடுகளிலும் வாழ்ந்து வருகின்றனர். இவர்களின் பிள்ளைகள் தொகையும் கணிசமாக அதிகரித்து வெளிநாடுகளில் சுமார் 10 இலட்சத்திற்கும் மேல் தமிழ் மக்கள் வாழ்ந்து வருகின்றனர் என்று அறியப்படுகிறது. இவர்களில் பெரும்பாலானவர்கள் வடக்கு மாகாணத்தை பூர்வீகமாகக் கொண்டவர்கள். கலாசார ரீதியாகவும் தொடர்ந்து தொடர்புகளைப் பேணி வருகிறார்கள். பலாலி விமான நிலையத்தை பிராந்திய விமான நிலையமாக அபிவிருத்தி செய்தால் புலம்பெயர்ந்தவர்கள் பெருமளவு பயண நேரத்தை சேமிக்கக்கூடியதாக இருக்கும்.

நேரடியாக யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவும் இதன் மூலமாக பொருளாதார வளர்ச்சிக்கு யாழ்ப்பாணம் சிறப்பாக முகம் கொடுக்கவும் முடியும் என்று நிச்சயமாகக் கூறமுடியும். வடக்கு மாகாணத்தில் இதனால் ஏற்படப்போகும் பொருளாதார வளர்ச்சியானது வடக்குகிழக்கு மாகாணங்கள் மட்டுமன்றி வடமத்திய மாகாணத்தின் பொருளாதார வளர்ச்சிக்கும் பெருமளவு பங்கு செலுத்தும் வாய்ப்பும் அதிகமாக தென்படுகிறது. புலம்பெயர் தமிழ் மக்கள் மட்டுமன்றி ஏனைய உல்லாசப் பயணிகளும் பெருமளவில் வடக்கு மாகாணத்திற்கு வருகின்றனர். இங்கு வாழும் மக்களின் கலை, கலாசார விடயங்களில் அவர்கள் அதிகளவு ஆர்வம் கொண்டிருப்பதனையும் அவதானிக்க முடிகின்றது.. பலாலி விமான நிலையத்தின் அபிவிருத்தி இந்தப் பிராந்தியத்தின் சுற்றுலாத்துறையின் அபிவிருத்தியுடன் மட்டும் நோக்காது தேசிய பொருளாதாரத்திற்கு நாம் செலுத்தும் பங்கையும் கணிசமாக அதிகரிக்கும் வாய்ப்பையும் நாம் புறந்தள்ளலாகாது. வடக்குகிழக்கு மாகாணங்களில் வேலையில்லாப் பிரச்சினையால் அவர்கள் விரக்தி நிலையில் இருப்பதனையும் காணமுடிகின்றது.



இவ்வாறான இளைஞர்களுக்கு சுற்றுலாத்துறையில் அதிக வேலைவாய்ப்புகளை உருவாக்க முடியும். வடக்குகிழக்கில் சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் நோக்கமும் செயல்திட்டமும் பலாலி விமான நிலையத்தின் மேம்பாட்டுடன் இணைந்ததாகவே இருக்க முடியும்.

புலம்பெயர்ந்த மக்கள், தாங்கள் உண்ணும் உணவுப் பொருட்கள் மற்றும் ஏனைய பொருட்களையும் இங்கிருந்து மிகவும் விருப்பத்துடன் வாங்கிச் செல்கிறார்கள். பலாலி விமான நிலையம் மூலமாக உள்ளூர் உற்பத்திகள் பெருமளவு ஏற்றுமதியாகும். நாட்டில் புதிதாக ஒரு விமான நிலையத்தைத் திறப்பதாயின் ஆகக் குறைந்தது மூன்று வருடங்களாவது செல்லும். இதுவரை பூரணமான பயனைப் பெற்றுக்கொள்ளாததும் அதிகளவு நன்மைகளை நாட்டுக்கு வழங்கக்கூடியதுமான பலாலி விமான நிலையத்தை நாம் இன்னும் கண்டுகொள்ளாமல் இருப்பது கவலைக்குரியது.

வசதிகளை நாம் துரிதமாகப் பயன்படுத்தினால் ஒரு வருடத்திற்குள்ளாகவே பன்னாட்டுத் தரம் வாய்ந்த பிராந்திய விமான நிலையமாக இதனை அரசினால் தரமுயர்த்த முடியும். இதற்கு உதவ இந்தியா முன்வரும். ஏற்கனவே இந்திய அதிகாரிகளால் இதற்குரிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தற்போது பலாலி விமான நிலையம் இரண்டரைக் கிலோ மீற்றர் வரையிலான ஓடுபாதையைக் கொண்டிருந்தாலும் இலகுவாக மூன்றரைக் கிலோ மீற்றராக நீடிப்பதற்குத் தேவையான அரச காணிகளை உடனடியாகப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக உள்ளது. தனியார் காணிகளையோ, வேறு காணிகளையோ சுவீகரிக்க வேண்டிய தேவை ஏற்படாது.

இந்த விமான நிலையம் பிராந்திய விமான நிலையமாக தரமுயர்த்தப்படின் தென்கிழக்காசிய நாடுகளுக்கிடையிலான சிறப்பு விமான நிலையமாகவும் அதிகளவு மக்கள் குடாநாட்டுக்கு நேரடியாக வந்துசெல்லக்கூடியதாகவும் அமையும். நாட்டுக்குத் தேவையான அந்நியச் செலாவணி பெருமளவில் கிடைக்கும். பலாலி விமான நிலையம் கடலோடு இணைந்ததாக இருப்பதும் அருகில் காங்கேசன்துறை துறைமுகம் அமைந்திருப்பதும் எமக்கு கிடைக்கப் பெற்ற பெரிய செல்வங்கள். எனவே இத்துறைமுகத்தையும் பலாலி விமான நிலையத்தையும் இனியும் காலம் தாழ்த்தாது துரிதமாக அபிவிருத்தி செய்து மக்களின் பயன்பாட்டுக்கும் பொருளாதார, வர்த்தக தேவைகளுக்கும் பயன்படுத்த அரசு ஆவன செய்யவேண்டும். இந்த அபிவிருத்திகளை இனியும் நாம் உதாசீனம் செய்தால் எமது பிராந்தியத்தின் பொருளாதார, வர்த்தக வளர்ச்சியில் தேக்க நிலைமை ஏற்படும். அதிகரித்துச் செல்லும் வேலையில்லாப் பிரச்சினைக்கு முகம் கொடுக்க முடியாத நிலைமை ஏற்படும்.


இளைஞர்கள் மத்தியில் விரக்தி நிலைமை ஏற்பட்டு அவர்கள் மீண்டும் வெளிநாடுகளை நோக்கிச் செல்ல எத்தனிப்பர். இதனால் நாட்டுக்குத்

> ஒரு வருடத்திற்குள்ளாகவே பன்னாட்டுத் தரம் வாய்ந்த பிராந்திய விமான நிலையமாக இதனை அரசினால் தரமுயர்த்த முடியும். இதற்கு உதவ இந்தியா முன்வரும்.
>
> பலாலி விமான நிலையம் இரண்டரைக் கிலோ மீற்றர் வரையிலான ஓடு பாதையைக் கொண்டிருந்தாலும் இலகுவாக மூன்றரைக் கிலோ மீற்றராக நீடிப்பதற்குத் தேவையான அரச காணிகளை உடனடியாகப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக உள்ளது.

தேவையான மனித வலுவை நாம் மேலும் மேலும் இழக்க வேண்டி ஏற்படலாம். இதனை பொதுமக்களுக்கான விமான நிலையமாக அபிவிருத்தி செய்யாவிடின், எதிர்காலத்தில் இது இராணுவ மற்றும் விமானப்படையின் விமான நிலையமாக மாற்றமடையும். காங்கேசன்துறை துறைமுகம் வர்த்தக நடவடிக்கைக்காகத் திறந்துவிடப்படல் வேண்டும்.

வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த வர்த்தகர்கள் தற்போது கொழும்புத் துறைமுகம் மூலமே இறக்குமதி, ஏற்றுமதி வர்த்தகம் செய்கின்றார்கள். இதனால் வீண் செலவும் தூரமும் அதிக நாட்களும் செல்கிறது. ஆகவே காங்கேசன்துறை துறைமுகத்தை வர்த்தக நடவடிக்கைக்காக திறந்துவிடல் வேண்டும். பொருளாதாரத்தில் புத்துணர்ச்சி பெற்ற புதிய பிராந்தியமாக வடபிராந்தியம் எழுச்சிபெற இது எமக்கு ஒரு வாய்ப்பாக கருதுகின்றோம். இதுதொடர்பில் தாங்கள் இலங்கை அரசுடனும் இந்தியத் தலைமை அமைச்சருடனும் உரையாடி விரை வாக நடவடிக்கை எடுப்பீர்கள் என நாம் எதிர் பார்க்கின்றோம் என யாழ் வணிகர் கழகம் கோரிக்கை விடுத்துள்ளது.

*பலாலி விமானநிலையம்*
*அபிவிருத்தி செய்யப்பட வேண்டும் என்பதை*
*தமிழர் சமூக ஜனநாயக கட்சி வரவேற்கிறது.*
*கட்சி பத்திரிகையான கண்ணோட்டம் பத்திரிகையில்*
*"தேவை ஒரு சர்வதேச விமான நிலையம்"*
*என்ற தலைப்பில் இவ் விடயம் தொடர்பாக*
*2016 ஜனவரி இதழில் எழுதியிருந்தோம்*



ஜெயசேகரம் தலைவர், யாழ். வணிகர் கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏனிந்த பாராமுகம்

**பிலக்குடியிருப்பு மக்கள் மீது விமானப்படையினர் காட்டிய கரிசனை தமிழர் பிரதிநிதிகளுக்கு கிடையாதா?**
**யுத்தம் முடிந்ததால் நாட்டு மக்களுக்கு கிடைத்த நிம்மதியும், பயன்களும் கேப்பாபுலவு மக்களுக்கு கிட்டாதா?**

மக்களின் கஷ்டங்களை புரிந்து கொண்டு படையினர் வசமுள்ள மக்களின் நிலங்களை விடுவிக்கக் கோரும் அரசியல் தலைவர்கள் மற்றும் பொது அமைப்புக்களை சேர்ந்தவர்கள் விடுவிக்கப்பட்ட இடங்களில் மக்களின் நிலை குறித்து பாராமுகமாயிருப்பது ஏன்?

கேப்பாபுலவு, பிலக்குடியிருப்பு மக்கள் தமது நிலங்களை ஆக்கிரமித்திருக்கும் இராணுவத்தினரும், விமானப்படையினரும் தமது நிலங்களிலிருந்து வெளியேறி தமது மீள் குடியமர்வுக்கு வழிவிட வேண்டும் என விமானப்படை முகாம் முன்பாக வீதியின் அருகில் தொடர்ச்சியாக அமர்ந்திருந்து தமது கோரிக்கையை வலியுறுத்தி போராட்டம் நடாத்தினார்கள் இந்த மக்களின் கோரிக்கைக்கு ஆதரவாக நாட்டின் நாலாபுறங்களிலுமிருந்து குரல்கள் எழுந்தன. பிலக்குடியிருப்பு மக்களின் கோரிக்கைக்கு செவிசாய்த்த அரசுத் தலைவர்களும், விமானப்படையினரும் இந்த இடத்தை மக்களிடம் மீள ஒப்படைக்க முன்வந்தனர்.

பிலக்குடியிருப்பு மக்கள் மீளக் குடியமர்ந்து சுமார் இரண்டு மாதங்கள் கடந்துவிட்டது. ஆயினும், இந்த மக்கள் இன்னும் அடிப்படை வசதிகள் எதுவுமற்ற நிலையில் இருந்து வருகின்றார்கள்.

வடக்கு மாகாணத்தில் அதிகாரத்தை கையில் வைத்திருப்பவர்களோ, காணிகள் விடுவிக்கப்படுவதற்கு முதல்நாள் பத்திரிகையாளர் மாநாடு நடாத்தி இந்த மக்கள் போராட்டத்திற்கு கிடைத்த வெற்றிக்கு உரிமை கோர முற்பட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் மற்றும் பேச்சாளர் உட்பட தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளாக வலம்வருகின்ற எவருமோ இந்த மக்களின் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்யவில்லை.

மீளக் குளயமர்ந்த மக்கள் தற்காலிக இருப்பிடங்களை அமைத்துக் கொள்வதற்கு எந்தவித உதவியும் செய்து கொடுக்கப்படவில்லை. மரங்களின் நிழலும், ஒரு தகட்டு துண்டின் மறைப்புமே அவர்களின் சமையலறைகளாக காணப்படுகின்றன. இந்த மக்களுக்கு தனித்தனியாக இல்லாவிட்டாலும் ஒரு பொது மலசல கூடம் கூட அமைத்துக் கொடுக்கப்படவில்லை. ஒரு மறைப்பு கூட இல்லாது அவர்களது பொதுக்கிணறு காணப்படுகிறது.

எல்லைகள் எதுவும் அற்று ஒரே காணி போல காட்சியளிக்கும் அநத இடத்தில் குடியிருக்கும் இந்த மக்கள் தமது விவசாய முயறிசிகளை மேற்கொள்வதற்கு வேலிகளை அமைக்க வேண்டும். முன்பு போல காடுகளுக்குள் சென்று தடி, தண்டுகளை வெட்டியெடுக்க முடியாது. இந்த வேலிகளை அமைப்பதற்கு மட்டுமாவது யாராவது உதவ மாட்டார்களா என்ற அவர்களின் எதிர்பார்ப்பு ஈடேறாமலே உள்ளது.

தங்கள் பிள்ளைகள் பாடசாலைக்கு செல்வதற்கான பஸ் போக்குவரத்தை ஒழுங்குபடுத்தி தருமாறு அவர்கள் விடுத்த கோரிக்கை கூட இன்னமும் கைகூடவில்லை.

நாங்கள் சொந்த இடங்களுககு வந்துவிட்டோம் இன்னும் ஓரிரு வருடங்களில் எங்கள் நிலத்திலேயே எங்களது வருமானத்தை ஈட்டிக்கொள்ளவும் எங்கள் வாழ்க்கையை வளமாக்கிக் கொள்ளவும் எங்களால் முடியும் என்ற நம்பிக்கை ஒன்றே அவர்களுக்குத் துணையாய் நிற்கிறது.

பிலக்குடியிருப்பு மக்களின் காணிகளை விமானப்படையினர் விடுவித்துள்ள போதும் இராணுவத்தின் முகாம் அமைந்துள்ள கேப்பாபுலவு மக்களின் காணிகள் இன்னும் விடுவிக்கப்படவில்லை. கேப்பாபுலவு மக்கள் தொடர்ந்தும் 2 மாதங்களுக்கு மேலாக போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள் 138 குடும்பங்களுக்கு சொந்தமான 482 ஏக்கர் நிலம் இராணுவத்தினரின் பிடியில் உள்ளதாக அவர்கள் தெரிவிக்கின்றனர். அருகில் உள்ள காடுகளையும், வீட்டோடு சேர்ந்த சிறிதளவான விவசாய நிலங்களையும், கடலையும் நம்பி வாழுகின்ற இம் மக்கள் தமது பூர்வீக வாழிடங்களைப் போலவே தொழில்வாய்ப்புகளையும் இழந்து நிற்கின்றனர்.

புலிகளின் பிடியிலிருந்து தமிழ் மக்களை விடுவித்ததாக சிங்கள் அரசியல் தலைவர்கள் இராணுவத்திற்கு புகழ்மாலை சூட்டுகின்றனர். ஆனால், அதே இராணுவத்தினரே ஒரு பகுதி தமிழ் மக்கள் தமது சொந்த வாழிடங்களுக்கு திரும்பிச் செல்லவும் அவர்களின் ஜீவனோபாயத்திற்கும் யுத்தம் முடிந்து 8 வருடங்கள் கடந்தும் தடையாய் உள்ளனர்.

யுத்தம் முடிவுக்கு வந்து புதிய வீதிகளும், சொகுசு வாகனங்களும், குளிரூட்டப்பட்ட கட்டிடங்களும், சுப்பர் மார்க்கெட்டுகளும், பொழுது போக்குகளும், வை பி வசதிகளும் என நவீன வாழ்க்கை வசதிகளை அனுபவிக்கும் இந்த நாட்டு மக்களுக்கு மத்தியில் தமது பூர்வீக வாழிடங்களுக்குச் செல்ல ஒரு பகுதி மக்கள் இன்னும் போராடிக்கொண்டிருப்பது இந்த நாட்டு மக்கள் அனைவருக்கும் அவமானமாகும்.


பிலக்குடியிருப்பில் சமையலறையில் தனது பிள்ளைகளுக்க மதிய உணவு தயாரிக்கும் தாய்


விமானப்படையினரால் விடுவிக்கப்பட்ட பிலக்குடியிருப்பில் மீளக்குடியமர்ந்துள்ள ஒரு குடும்பத்தின் வீடு


கேப்பாபுலவில் இராணுவ முகாம் வாயிலில் குடியிருந்த நிலத்தை விடுவிக்கக் கோரி போராடும் மக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் அமைப்பு மாற்றம் என்பது இன்னொரு ஏமாற்றமே!

## பிரித்தானியாவில் அமைச்சர் மனோ கணேசன்



லண்டனிலிருந்து வி. சிவலிங்கம்

சமீபத்தில் லண்டன் வந்திருந்த அமைச்சர் மனோ கணேசன் தந்தை செல்வா ஞாபகார்த்த உரை நிகழ்த்த பிரித்தானிய கூட்டமைப்புக் கிளையால் அழைக்கப்பட்டிருந்தார். அந்நிகழ்வில் அவர் ஆற்றிய உரை கூட்டமைப்பை நோக்கிப் பல கேள்விகளை எழுப்பியதாக அமைந்தது. புதிய அரசியல் அமைப்பு வரையும் வழிகாட்டுக் குழுவில் அங்கம் வகிக்கும் அவர், விரைவில் வெளியிடப்படவுள்ள அரசியல் அமைப்பு வரைபில் குறிப்பிடத்தக்க எதுவும் இல்லை எனத் தெரிவித்து இவற்றை மக்கள் மத்தியில் எடுத்துச் செல்ல கூட்டமைப்பு தயங்குவதாக குற்றம் சாட்டினார்.

- வடக்கு கிழக்கு இணைப்பு இல்லை.
- பௌத்த மதத்திற்கு முதலிடம் உண்டு
- இலங்கை- இந்திய ஒப்பந்தம், சந்திரிகா அரசியல் பொதி போன்றவற்றில் வழங்கிய உரிமைகளை விட குறைவாகவே தற்போது தரப்படவுள்ளன.
- தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு, ஜனாதிபதி ஆட்சியை முடிவுக்கு கொண்டுவருதல், தேர்தல் முறையை மாற்றுதல் என்பவற்றில் இன்னமும் உடன்பாடு இல்லை.

புதிய அரசியல் அமைப்பு அல்ல பழைய அரசியல் அமைப்பில் திருத்தங்களே மேற்கொள்ளப்படவுள்ளன.

புதிய அரசியல் அமைப்பு யோசனைகளை மக்கள் வாக்கெடுப்பிற்கு விட அரசு தயாராக இல்லை.

இவ்வாறு தற்போதுள்ள நிலைமைகளை எடுத்துரைத்த அவர், உண்மைகளை தமிழ் மக்கள் முன்னிலையில் வைக்க கூட்டமைப்பு ஏன் தயங்குகிறது? எனக் கேள்வி எழுப்பிய அவர், இன்றைய அரசியல் புறச்சூழலைக் கருத்தில் கொண்டு எதையும நிராகரித்துச் சென்றால் கிடைப்பதும் இல்லாமல் போகும் ஆபத்தே உண்டு எனவும எச்சரித்தார்.

அமெரிக்காவில் கறுப்பு இன மக்களின் நலன்களைப் பாதுகாக்கும் பொருட்டு சகல கட்சிகளிலுமுள்ள கறுப்பு இனப் பிரதிநிதிகள் பொதுவான அமைப்பு ஒன்றை ஏற்படுத்தி உள்ளது போல, இலங்கையிலுள்ள தமிழர்களின் நலன்களைக் கவனிக்க சகல கட்சிகளிலுமுள்ள தமிழ்ப் பிரதிநிதிகளை உள்ளடக்கிய பொது அமைப்பை உருவாக்க வேண்டும் என நான் யோசனை ஒன்றை முன்வைத்த போதிலும் அதற்கான ஆதரவு கூட்டமைப்பில் இல்லை என மனோ கணேசன் தனது ஏமாற்றத்தை வெளியிட்டார்.

தந்தை செல்வா நினைவுப் பேருரை, அப்பெரியவர் காட்டிய பாரிய முன்மாதிரியை, மலையக மக்கள் தலைமையை இணைத்து, அணைத்துச் சென்ற மனப்பாங்கு இன்று இல்லையே என்ற ஏக்கத்தை வெளிப்படுத்துவதாக அமைந்திருந்தது. கிழக்கு மாகாண நிர்வாகத்தில் முஸ்லிம் காங்கிரசுடன் இணைந்து நிர்வாகத்தை நடாத்தும் கூட்டமைப்பு தமது தலைமையிலான முற்போக்கு முன்னணியுடன் இணைந்து செயற்பட தயங்குவது ஏன்? எனவும் கேள்வி எழுப்பியிருந்தார் மனோ கணேசன்.

மொத்தத்தில் செல்வா நினைவுப் பேருரை கூட்டமைப்பினதும், குறிப்பாக முதலமைச்சர் விக்கினேஸ்வரனினதும் அரசியல் போக்கைக் கேள்விக்குட்படுத்துவதாக அமைந்தது.

ஒவ்வொரு
அநீதியையும் கண்டு
ஆத்திரத்தில்
அதிர்ந்து போவாயானால்,
நீ எனது தோழன்.



## போதையூட்டும் ...

( 1 ம் பக்கத் தொடர்ச்சி )

வடக்கு மற்றும் கிழக்கில் வாழ்க்கை கீழ்வாந்து கிடக்கிறது

வறுமை கோரத்தாண்டவம் ஆடுகிறது.

பாரம்பரிய தொழில்களான விவசாயம், மீன்பிடி என்பன ஆட்டம் கண்டுள்ளன.

வறட்சி, சுற்றாடல் அழிவு, வளச்சூறையாடல் என்பன சாதாரண மக்களின் வாழ்க்கையை பாரதூரமாகப் பாதித்துள்ளன.

தொழில் பயிற்சி நெறிகளை, வேலை வாயப்புக்களை உருவாக்குவதில் தீவிர கவனம் செலுத்தப்படவில்லை

மண், தேசம் பற்றி வாய்ப்பந்தல் போடுபவர்கள் இந்த மண்ணில் மக்கள் வாழ்வதற்கான நம்பிக்கையை கட்டி எழுப்புவார்களா?

பர்ராளுமன்ற, வடக்கு கிழக்கு மாகாணசபைகளின் பிரதிநிதிகள் ஆற்றக் கூடிய காரியங்கள் எவ்வளவோ இருக்கின்றன சுகாதாரம், கல்வி, போக்குவரத்து, வேலைவாய்ப்பு, சுற்றாடல் பாதுகாப்பு, பெண்கள் தலைதாங்கும் குடும்பங்களின் வாழ்வை மேம்படுத்துவது;

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட, இழப்புகளைச் சந்தித்தவர்களுக்கான கண்ணியமான மறுவாழ்வு;

நிலம், வீடு, சமூக பாதுகாப்பு என பல காரியங்கள் ஆற்றப்பட வேண்டும்.

மனிதர்கள் நிம்மதியாக, சமாதானமாக, மகிழ்ச்சியாக வாழ்வதற்கான உறுதியான சூழலை கட்டியெழுப்புவதே சமூகத் தலைமையின் கடமை.

உலகில் சமூக அக்கறை கொண்ட அரசியல் தலைமைகள் இவ்வாறே சிந்திக்கின்றன.

யுத்தத்தால் பேரழிவைச் சந்தித்த நாட்டில் சமூகத்தில் இந்த அக்கறைகள் பாரிய அளவில் தேவைப்படுகின்றன.

ஆனால், ஜீவாதாரமான பிரச்சனைகளை விட்டு விட்டு போதையூட்டும் வெறுப்பரசியல் இங்கு இன்றளவில் செல்வாக்குச் செலுத்துகிறது.

காரியமாற்ற லாயக்கற்றவர்கள் போதையூட்டும் வெற்று சொற்சிலம்ப அரசியலில் ஈடுபடுகிறார்கள்.

அவர்கள் மக்களின் சுயாதீனமான போராட்டங்களை, இழப்புக்களை தமது சொந்த நலன்களுக்காக களவாடிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த அரசியல் சமூகத்ததை மீண்டும் மீண்டும் நரகப் படுகுழிக்குள் தள்ளுவதாகவே அமையும். உருப்பட விடாது.

ஆக்கபூர்வமான செயற்பாடுகளே தேவை. கூட்டதில் கூடி நின்று கூவிப்பிதற்றல் அல்ல. நாட்டதில் கொள்வது அவசியப்படுகிறது

## சுதந்திரத்திற்காகப் போராடி சுதந்திரம் மறுக்கப்பட்ட மனிதன்



1986 இல் ரெலோ இயக்கம் மீதான தாக்குதலையும், அதன் தலைவர் சிறி சபாரத்தினத்தின் படுகொலையையும் கண்டித்து சுதந்திரத்திற்காக போராடி சுதந்திரம் மறுக்கப்பட்ட மனிதன் என்ற பதாகையை தாங்கி ஜனநாயக வழியில் நடந்த, புலிகள் கணக்கெடுக்காத, தமிழ் சமூகம் கண்டுகொள்ளத் தவறிய மக்கள் போராட்டம்.




சமூகவிரோதிகள் எனக் குற்றம் சுமத்தி 1986 ஏப்ரல் 29 ஆம் திகதி ரெலோ இயக்கத்தின் மீது புலிகள் ஆரம்பித்த தாக்குதல் ரெலோ இயக்கத்தின் தலைவர் சிறி சபாரத்தினம் மே 6 ஆம் திகதி அன்னாங்கை பகுதியில் சுட்டுக் கொல்லப்பட்டதுடன் முடிவுக்கு வந்தது

சுதந்திரத்திற்காகப் போராடி சுதந்திரம் மறுக்கப்பட்ட இம் மனிதனின் 31 ஆவது ஆண்டு நினைவு தினம் இவ்வருடம், அவர் கொல்லப்பட்ட கோண்டாவில் அன்னாங்கை தோட்டவெளி பகுதியில் ரெலோ இயக்கத்தினரால் அனுஷ்டிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதாபிமானங்கொண்ட புதிய தலைமுறைக்காக ...

## திருநாவுக்கரசு சிறிதரன் ( சுகு ) அவர்கள் எழுதிய நூல் வெளியீடு

திருநாவுக்கரசு சிறிதரன் (தோழர் சுகு) எழுதிய கட்டுரைகள், பத்தி எழுத்துக்களின் தொகுப்பு நூலாக வெளியிடப்பட்டுள்ளது. டான் தொலைக்காட்சி இயக்குனர் திரு.எஸ்.குகநாதன் அவர்களின் ரஜனி வெளியீட்டகம் இந்நூலை வெளியிட்டுள்ளது. மனிதாபிமானங்கொண்ட புதிய தலைமுறைக்காக என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள இந்நூலின் வெளியீட்டு விழா யாழ்ப்பாணம் பிரதான வீதியில் அமைந்துள்ள திருமறைக்கலாமன்ற கலைத்தூது கலையகத்தில் 06.05.2017 அன்று நடைபெற்றது.

தோழர் வி.ஜெகநாதன் (நக்கீரன்) அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் பேராசிரியர் இராஜன் கூல், திரு.ரெங்கன் தேவராஜன், திரு. சிராஜ், திரு. பெ.முத்துலிங்கம், திரு.ஏ.சி.ஜோர்ச், சி.கருணாகரன், திரு. அகிலன் கதிர்காமர், தோழர் தமயந்தி, ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றினர். இவ் விழாவிற்கு வருகை தந்திருந்த வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே சிறப்பு பிரதி வழங்கி கௌரவிக்கப்பட்டார்.




## ஜனாதிபதியின் வர்த்தமானி அறிவித்தலை மீளப்பெறக் கோரும் முசலி முஸ்லிம் மக்கள்




தமது வாழ்விடங்கள், வயல் நிலங்கள், மேச்சல் தரைகள் என சுமார் ஒரு இலட்சம் ஏக்கர் காணிகளை வன இலாகாவிற்கு வழங்க ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா விடுத்திருக்கும் வர்த்தமானி அறிவித்தலை இரத்துச் செய்யக் கோரி முசலி கிராம முஸ்லிம் மக்கள் தமது எதிர்ப்பை தெரிவித்து பள்ளிவாசல் அருகில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

காடு பேணற் கட்டளைச் சட்டத்தின் கீழ் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு மகாவலி மற்றும் சுற்றாடல் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன ஆகிய நான் கீழ் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் வரையறுக்கப்பட்டுள்ள எல்லைகளுக்கு உட்பட்ட 40030.525 ஹெக்டயர் விஸ்தீரணத்தைக் கொண்ட மாவில்லு, வெப்பல், கரடிக்குழி, மறிச்சுக்கட்டி, விளாத்திக்குளம், மற்றும் பெரியமுறிப்பு ஆகிய ஒதுக்குக் காடுகளுக்கு உரியதான காட்டுப்பிரதேசத்தை 2017 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 21 ஆம் திகதியிலிருந்து மாவில்லு பேணற்காடு என இத்தால் பிரகடனப்படுத்துகிறேன் என வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த வர்த்தமானி அறிவித்தலை இரத்துச் செய்யக் கோரி முசலி பிரதேச மக்கள் ஜனாதிபதிக்கு 24.03.2017 இல் கடிதம் ஒன்றையும் அனுப்பிவைத்துள்ளனர். இவ் அறிவித்தல் மூலம் தமிழ் மக்களின் நிலங்களும் கையகப்படுத்தப்படவுள்ள போதும் தமிழ் மக்கள் இது குறித்த பிரக்ஞை அற்றிருப்பதாகவும் இந்தப் போராட்டத்தை முன்னின்று நடாத்தும் முஸ்லிம் பிரமுகர்கள் தெரிவித்தனர்.

## மீண்டும் சொந்த இடங்களுக்கு திரும்பும் முள்ளிக்குளம் கிராம மக்கள்

இராணுவத்தினரால் 2007 ஆம் ஆண்டு தமது ஊரிலிருந்து வெளியேற்றப்பட்ட முள்ளிக்குளம் கிராம மக்கள் தாம் 3 தலைமுறையாக வாழ்ந்த ஊரிலுள்ள தமது வீடுகளுக்கு திரும்பிச் செல்ல அனுமதிக்குமாறு கோரி ஒரு மாதத்திற்கும் மேலாக தமது கிராமத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள கடற்படை முகாம் நுழைவாயிலில் அமர்ந்திருந்து அற வழியில் போராடிவந்தனர். இம் மக்கள் நடாத்திய போராட்டத்தை கவனத்தில் எடுத்துக்கொண்ட அரசாங்கம் கடற்படை முகாமை அகற்றி இந்த மக்கள் தமது சொந்த இடத்திற்கு திரும்புவதற்கு அனுமதி வழங்கியுள்ளது.

தற்போது கடற்படையினரின் பாவனையில் உள்ள 27 வீடுகளை மட்டும் மாற்று ஏற்பாடுகளை செய்தபின் 6 மாதத்தில் ஊர் மக்களிடம் கையளிப்பதற்கு கடற்படையினர் இணங்கியுள்ளனர்.

மூன்று நாட்களில் திரும்பிவர அனுமதிப்போம் என்று கூறி இராணுவத்தினரால் 2007 ஆம் ஆண்டு தமது ஊரிலிருந்து வெளியேற்றப்பட்டதாக கூறும் இந்த மக்கள் கடந்த 10 ஆண்டுகளாக அகதிகளாக அலைந்துகொண்டிருந்த நிலையிலிருந்து தமக்கு விடிவு கிட்டியிருப்பதாகத் தெரிவித்தனர்.

மக்கள் தமது பிரச்சினைகளை முன்வைத்துப் போராடக் கூடிய நிலைமையும் அத்தகைய மக்களின் போராட்டங்கள் குறித்து அரசாங்கம் கவனத்திலெடுத்துத் தீர்வுகாணுகின்ற நிலைமையும் பதவிக்கு வந்துள்ள நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்திலேயே சாத்தியமாகியுள்ளது. இது இந்த அரசாங்கம் பதவிக்கு வர காரணமாயிருந்த மக்களுக்கு கிடைத்த வெற்றியாகும்.




தி. சிறிதரன் 294, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம், அவர்களால் இல 781, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் மண் பதிப்பகத்தில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org